Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 25 (10-09-1993) வெள்ளிக்கிழமை ஓசை 204

## பருத்தித்துறை நீதிமன்று திறந்து வைக்கப்பட்டது

தமிழீழத்தின் மூன்றாவது நீதிமன்றம் நேற்று காலை பத்து மணிக்கு பருத்தித்துறையில் திறந்து வைக்கப்பட்டது. நீதி மன்றத்தினை கடற்புலிகளின் விசேட தளபதி சூசை நாடாவை வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர். திறப்பு விழா நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தலைமையில் நடைபெற்றது. தமிழீழகாவல்துறையினரின் பாண்ட் அணியின் இசையுடன் திறப்புவிழா ஆரம்பமானது. மாவீரர் பணிமனை பொறுப்பாளர் [10 ஆம் பக்கம் பார்க்க]

### தமிழர் சுய நிர்ணய உரிமை

# சர்வதேச ரீதியாக அங்கீகரிக்குக

# பிரிட்டிஷ் பிரதமரிடம் கோரிக்கை!

## தமிழர் சர்வதேச அமைப்பு விடுத்தது

(லண்டன்)

தமிழர்களது சுய நிர்ணய உரிமையை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்க உலக நாடுகளை வற்புறுத்துமாறு பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயரிடம் தமிழர்களின் சர்வதேச கூட்டிணைப்பு அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுமார் 15 மனித உரிமை அமைப்புக்கள் தமிழர்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படி ஏற்கனவே விடுத்த வேண்டுகோளுக்குஆதரவு கோரி பிரிட்டிஷ் பிரமரிடம் மேற்படி அமைப்பு கடிதமொன்றை நேரடியாக கையளித்துள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்டு வந்த வன்முறைகளை சர்வதேச நீதி நிபுணர்கள் குழு கண்டித்திருந்தது. எனினும் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் மீண்டும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன இந்த நிலையில் தமிழர்களது சுயநிர்ணய உரிமைக்கு சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கு தங்களது ஆதரவை வேண்டி நிற்கிறோம் என்று அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பூநகரியில் மோதல் இரு படையினர் காயம்

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் கல்முனையில கடந்த செவ்வாயன்று ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் ஓர் இராணுவச்சிப்பாயும், கடற்படைசிப்பாய் ஒருவரும் காயமடைந்தனர்.

இத் தகவலை கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று தெரிவித்தார். படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொன்னாலை நோக்கி படையினர் எறிகணை வீச்சு

[அராலி]

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் நோக்கி நேற்று முன்தினமிரவு காரைநகர் படையினர் மேற்கொண்ட எறிகணை மற்றும் 50 கலிபர் தாக்குதலில் ஆலய வளவில் உள்ள விநாயகர் ஆலயம் ஒன்று சேதம் அடைந்தது. படையினர் தாக்குதல் நடத்திய வேளை ஆலயப் பகுதியில் பொது மக்கள் பலர் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் ஆலயத்தில் நடைபெற்ற கிருஷ்ண ஜெய (10ஆம் பக்கம் பார்க்க)

## மாடு மேய்த்தவர் மீது இராணுவம் துப்பாக்கி சூடு

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி வடக்கு அளவோலை பிள்ளையார் கோவிலிற்கு பின்புறமாக மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர் இராணுவத்தினரின் துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் அளவோலை பிள்ளையார் கோவிலின் பின்புறமாக உள்ள வயல் வெளியில் தனது மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த செல்லையா முருகானந்தன் (வயது 33) என்பவர் அம்பனை பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தால் கையில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## படையினரால் குடும்பஸ்தர் சித்திரவதை செய்து கொலை

(அம்பாறை)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினர் குடும்பஸ்தர் ஒருவரைச் சித்திரவதை செய்து கொலைசெய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெல்லா வெளியில் உள்ள றெட்பானா கிராமத்திற்கு கடந்த வெள்ளியன்று வந்த இராணுவத்தினர் அங்குள்ள வீடு ஒன்றில் வசித்த பி. கோபாலபிள்ளை என்பவரை வீட்டிலிருந்து வெளியே இழுத்து அவரை நையப் புடைத்துள்ளனர். பின்னர் அவரது வீட்டை தீவைத்து கொளுத்திவிட்டு அதனை அணைக்குமாறு கோபாலபிள்ளையைக் கேட்டுள்ளனர். அதன்பின்னர் கோபாலபிள்ளையை கட்டி இழுத்துக்கொண்டு வீதி வழியாகச் சென்றனர். துப்பாக்கி அடிப்பாகத்தினால் தாக்கியதாலும்கட்டி இழுத்ததாலும் கடும் காயங்களுக்குள்ளான இவர் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார்.

## கைது

(கொழும்பு)

கொழும்பில் இயங்கும் தமிழ்க் குழு ஒன்றின் சிரேஷ்ட உறுப்பினர் எனச் சொல்லப்படும் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிசார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபர் சுழல் துப் (10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆட்சேர்ப்புமுறை அதிகாரிகள் சிலர் எதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் சிப்பாய்கள் சேர்க்கப்படும் தற்போதைய முறைகுறித்தும் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி காலம் குறித்தும் இராணுவ அதிகாரிகளில் சிலர் எதிர்த்து வருவதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது படையில் சேர்க்கப்படும் சிப்பாய்களின் கல்வித்தரம் 8 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பாக குறைக்கப்பட்டுள்ளது. 5 ஆம் வகுப்புடன் பாடசாலையை கைவிட்டவர் இதுவரை வீணாக காலம் கழித்து பல் (10ஆம் பக்கம் பார்க்க)

## 4200 பரல் மண்ணெய் அனுப்ப இணக்கம்

[நமது நிருபர்]

யாழ்.மாவட்டத்திற்கு 4200 பரல் மண்ணெண்ணையை அனுப்பிவைக்க சிறிலங்கா அரசு அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு கட்டங்களாக மேற்படி எண்ணிக்கையான பரல் மண்ணெண்ணெய் "றுகுணு" கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக தற்சமயம் கொழும்பு துறைமுகத்திற்குச் சென்றுள்ள 'றுகுணு' கப்பலில் ஒரு தொகுதி பரல் மண்ணெண்ணெய் ஏற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இக் கப்பல் அடுத்த கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேருமெனவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே யாழ். மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும் மண்ணெண்ணெயை 1500பரல்களாக சிறிலங்கா அரச குறைத்ததை அடுத்து யாழ். அரச அதிபர் முன்னைய அளவான மண்ணெண்ணெயை பெறுவதற்கு முயற்சி செய்துவந்தமை தெரிந்ததே. [மா]

## வீரச்சாவு



லெப். இளங்கோ

கடந்த செவ்வாய் இரவு 11.20 மணியளவில் பூநகரி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற திடீர் மோதலில் விடுதலைப் புலி போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த லெப். இளங்கோ / இளந்தேவன் (தர்மலிங்கம் சிறிதரன் பரமன் கிராய் பூநகரி மன்னார்) என்பவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இஸ்ரேல் - பி. எல். ஓ. இயக்கம் பரஸ்பரம் அங்கீகரித்தன

(டெல்அவிவ்)

இஸ்ரேலும், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஒன்றை ஒன்று அங்கீகரித்து விட்டன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமாதான உடன்படிக்கை எதிர்வரும் 13 ஆம் திகதி வாஷிங்டனில் கைச்சாத்தாகும். இத் தீர்மானம் இஸ்ரேல் - பாலஸ்தீன விடுதலை இயக்கஉடன்படிக்கைக்கு பேருதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாலஸ்தீனமக்களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் கடந்த 40 வருடங்களாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால்பலர் பலியாகியுள்ளனர். பலகோடி பெறுமதியான சொத்துக்கள் நாசமாகின. இரண்டாவது உலகப்போரின் பின் பலஸ்தீனில் இப்பிரச்சினை ஆரம்பித்தது. ஐ. நா ஆலோசனைப்படி 1948 மே 14ஆம் திகதி இஸ்ரேல் உருவானது தொடர்ந்து நடந்த அரபு - இஸ்ரேல் போரினால் இஸ்ரேல் 40 சதவீத பரப்பை ஆக்கிரமித்தது. பாலஸ்தீனி (10ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### அசீர்ஷ்டசாலிக்கு அழகிய கைக்கடிகாரம்

எமது ஸ்தாபனத்தில் மணிக் கூடு றேடியோக்கள் சேவிஸ் செய்யும் வாடிக்கையாளர்க ளின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் ஒவ்வொரு மாத முடிவிலும் அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப் பட்டு அதிர்ஷ்டசாலிக்கு அழ கிய Casio கைக்கடிகாரம் பரி சாக வழங்கப்படும் "டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப் பாணம். [சி-7339]

### விற்பனைக்கு

ஆர்கனான், மெட்டீரியா மெடிக்கா இரண்டு பாகங்கள், பயோகெமிஸ்டிரி வைத்திய முறை ஆகியன இலங்கை ஹோமியோபதி சபையின் பாடத்திட்டத்திற்கு அமை வாக தயாரிக்கப்பட்டது கிடை க்கும் இடம் வட இலங்கை ஹோமியோபதிசங்கம்35 நாவ லர்வீதி யாழ்ப்பாணம்.[5910]

### A/L 94 விஞ்ஞான பாடங்கள்

மீட்டல் வினா-விடை வகுப் புகள் ஆரம்பமாகின்றன எமது வழமையான ஆசிரியர்கள் சம் றொக் அக்கடமி யாழ் சுண்டுக் குளி (5920)

### நிம்மதி தரும் நீம்

நுளம்புத் தொல்லை எமக்கு இல்லை. நீம் சுகாதார தூபம் புகைத்து நிம்மதியாக நித்திரை செய்வோம். இயற்கை வளம் கொண்டே தயாரானது நீம் சுகாதாரதூபம் பக்கற் ஒன்று ரூ 3/- 25 பக்கற் கொண்ட ஒரு அட்டை ரூ 60/- அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற் பனை ஆகிறது 'மில்க்வைற்' ((சி/7368)

### தவறிவிட்டது

கொடிகாமம் மந்துவிலைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கணேசபாலேந்திரன் என்பவரு டைய 612350698X என்னும் இலக்கமுடைய தேசிய அடை யாள அட்டையும் கல்வி திணைக்கள அடையாள அட் டை ஒன்றும் கொடிகாமப் பகுதியில் தவறவிடப்பட்டுள் ளது. கண்டுஎடுத்தவர்கள் கீழ்க் காணும் கடையில் ஒப்படைக் கவும் 'கோகிலா தேனீர்ச் சாலை' கண்டிவீதி. கொடி காமம். (சி/7386)

### புலமைப்பரிசில் 1994

1994 புலமைப்பரிசில் மாண வருக்கு ஒவ்வொரு சனிக்கிழ மையும் பி ப 3 மணிக்கு நடா த்தப்படும். தொடர் பயிற்சிப் பரீட்சையின் 9-வது பரீட்சை 11-09-93 சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறும் வினா த்தாள் பெற்றுக்கொள்ளலாம் எடிசன் அக்கடமி யாழ்-இந்து அருகில் கே.கே எஸ் வீதி யாழ் ப்பாணம். (சி/7385)

### 'கொழும்பில் 'கல்யாணம்'

இந்துமகளிர்கல்லூரி பொன் விழாவில் இன்று கல்லூரிப் பழைய மாணவிகள் நடிக்கும் அராலியூர் சுந்தரம்பிள்ளை யின் கொழும்பில் கல்யா ணம் ஒரு இயல்பு நாடகம் Realistic Play [5928]

### காணவில்லை

இரண்டு பசுமாடுகள் இணை த்தபடி ஆனைக்கோட்டையி லிருந்து காணவில்லை. ஒன்று கறுப்பும் வெள்ளையும் மயிலை மூக்குவரை வளைந்த கொம்பு 'குறிப்பு'க்கு மற்றையது தனிச் சிறப்பு நடுநெற்றியில் வெள் ளை [குறிப்பு 'செ']உடையது கண்டவர்கள் ஈழநாத காரியா லயத்துடன் தொடர்பு கொள் ளவும். சன்மானம்வழங்கப்படும் (5930)

### O/L YR. &10 விஞ்ஞானம்

மீட்டல் வினா-விடை வகு ப்புஆரம்பமாகியுள்ளது. செவ் வியாழன் பி ப 5.30 ஆசிரி யர் திரு J R சூரி சம்றொக் அக்கடமி யாழ். சுண்டுக்குளி. [5921]

### O/L&YR 10. MATHS

O/L - பகல் நேர, மாலை நேர வகுப்புகளும் YR - 10 மாலை நேர வகுப்புகளும் நடைபெறுகின்றன ஆசிரியர்- திரு தயாளன் சம்றொக் அக் கடமி யாழ். சுண்டுக்குளி (5922)

### ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்

ஐம்பத்தி ஐந்து ரூபாவுக்கு உளத்தைத்தொடும் உணர்ச் சிகரமான ஓர் குடும்ப நாவல் பத்திரிகை, புத்தக விற்பனை யாளர்களிடம் கேளுங்கள் (வியாபாரிகளுக்கு கழிவுண்டு) பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீ காந் புத்தகசாலைகள் யாழ்ப் பாணம். (5818)

### நவகைடன்ஸ்

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L MATHS

திரு. U. குணம்

வார இறுதி வகுப்புகள்

94 A/L (1 வருடம்)

PURE: நுண்கணிதம் 10am.

APP: நீர்நிலையியல் 11am.

95 A/L

PURE: நுண்கணிதம் 1pm.

APP: காவிகள் 2pm

[சி-7388]

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-10

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் மணலாறு, அளம் பில், செம்மலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவ வண் டித் தொடர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**லெப் எட்வின்** (இரத்தினசபாபதி திலீபன்-புதுக்குடியிரு ப்பு-மணலாறு)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழ்ப்பயணிகள்.

1988ஆம் ஆண்டு மட்டு-தாழங்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**மேஜர் சந்திரன் வள்ளுவன்** (சாத்தமுத்து சிவஜெயம் அமிர்தகழி மட்டு)

இதேசம்பவத்தில் இடம்பெற்ற இந்தியப்படையின ருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சிறி/டைகர்தேவன்** (தம்பிப்பிள்ளை செந்தில்நாதன் புதூர்-மட்டு)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய,

**குட்டி** (து.கிருபாமூர்த்தி — —)

1990ஆம் ஆண்டு யாழ்-கோட்டைப்பகுதியில் சிறி லங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய் திய

**ஜனாத்** (— — —)

இதேபகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ரவாஸ்** [யேசுரத்தினம் புனிதராசா-வசாவிளான்-யாழ்]

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ்மாணவன். வாலழைச்சேனை இடம்பெயர்ந்தோர் முகாமில் கைது செய்யபபட்டு படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணு வத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**விவேகன்** [சிவ அரசரட்ணம்-எம். சி குவாட்டஸ்,67, எல்லைவீதி-மட்டு]

**கப்டன் கார்த்திக்** (சிவஞானம் சிவகுமார்-வன்னிவிளாங் குளம்-மாங்குளம்]

**2-ம் லெப். சிவராமன் நாச்சியப்பன்** [பரராசசிங்கம் சந் திரசேகரன்-வவுனியா]

**ஜெகதீஸ்** (பெருமாள் சிங்கராசா-ஊற்றுக்குளம்- கிளிநொச்சி]

முன்னாள் வடமராட்சிப் பிரதிப்பொறுப்பாளரும், வடமராட்சி தாக்குதல்பிரிவு தளபதியுமான,

**மேஜர் மேகன்** (ஜெகநாதன் நிர்மலநாதன்-உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு-யாழ்)

**2-ம் லெப். ஜான்** [திருநாவுக்கரசு சாந்தகுமார்-மயிலிய தனை, தொண்டமானாறு-யாழ்]

**வாசு** (இராசசிங்கம் ஜெராட் ஞானரஞ்சித் - நெல்லியடி, கரவெட்டிமேற்கு, யாழ்]

**வாசீசன்** (செல்லையா தயாளன் கரணவாய்கிழக்கு, கரவெட்டி-யாழ்)

யாழ்ப்பாணம் - மண்டைதீவில் சிறிலங்கா இராணு வத்தினர் நிலைகொண்டிருந்து சென்ற பகுதியில் இரு கிணறுகளிலிருந்து இதேதினத்தில் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 8 தமிழர்கள்

1992ஆம் ஆண்டு மட்டு-அம்பிலாந்துறை. கன்னாங் காட்டுப்பகுதியை சிறிலங்கா இராணுவத்தினரும். தேச விரோதசக்திகளும் சேர்ந்து சுற்றிவளைப்பு நடவடிக்கை யின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கோகுலதாசன்/கோகுலன்** (திருகேசு பேரின்பம்-செட்டிப் பாளையம்-மட்டு)

**ஊர்மிலன்/செல்வராஜ்** (பேரானந்தன் சிறிகுகன் - பெரிய போரதீவு - மட்டு)

**பிரிஜாபதி/தயாநிதி** (கைலாயபிள்ளை தயாநிதி-வாழைச் சேனை--மட்டு)

இதே சம்பவத்தின்போது கொல்லப்பட்ட ஆதரவாளர்.

**சற்குணம்** (சுறுத்தான்பிள்ளை சற்குணசிங்கம்-அம்பிலாந் துறை-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/7389]

பட்டமளிப்பு விழாவில்
பட்டம்பெறும் அனைவருக்கும்
எமது வாழ்த்துக்கள்

## பேபி போட்டோ

யாழ். பல்கலைக்கழகச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.

பட்டமளிப்பு வைபவத்தை முன்னிட்டு எம்மிடம்

கொழும்பு பல்கலைக்கழக கறுப்புக்கோட், யாழ் பல்கலைக் கழக மஞ்சல் கோட் ஆகியன உள்ளன.

நிழல்களை நிஜங்களாகவும்
நிகழ்வுகளை நினைவுகளாகவும்
படம்பிடித்துத் தருபவர்கள்

## பேபி போட்டோ

(5932)

## LONDON EXAMS

MAY / JUNE - 94

C.I.M.A. (Stage - 1)
I.A.B. (All Stages)

ஆரம்பம்: நாளை

**11-09-93—8-30 மணி**

★ பிரபல விரிவுரையாளர் குழு
★ குறைந்த கட்டணம்
★ சிறந்த பெறுபேறுகள்

உறுதியான கல்வியைப் பெற

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET,
JAFFNA. (சி-7395)

## எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)

கே கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Spoken English by BRITTO

சனி - ஞாயிறு 2-3 மணி
ஆரம்பம்
11-09-93 சனி 2 மணி
(சி-7384)

## அறிவுக் களஞ்சியம்

தமிழீழத்தின்
சிறந்த அறிவியல் ஏடு

மாதம்தோறும் வருகிறது
15ஆவது இதழ்

இப்போது
விற்பனையாகிறது!

விலை ரூபா 12/-
மட்டுமே.
(5923)

## மாதாந்த பரிசுத்திட்டம்

1ஆம் பரிசு ரூபா 2500/- பெறுமதியான பொருட்கள்
2ஆம் பரிசு ரூபா 1500- பெறுமதியான பொருட்கள்
3ஆம் பரிசு ரூபா 1000/- பெறுமதியான பொருட்கள்

பொருட்களை பரிசு பெறுபவர் தெரிவு செய்யலாம். ரூபா ஐந்நூறுக்கு மேற்பட்ட கொள்வனவு செய்வோர்க்கு வழங்கப்படும் இலவச பரிசுச் சீட்டுகளில் மாதாந்த குலுக்கல் மூலம் பரிசுகள் வழங்கப்படும்.

பீங்கான் கிளாஸ் வகைகள் மலிவு விற்பனை இடம் பெறுகின்றது.

அண்மையில் தருவிக்கப்பட்ட நவநாகரிக புடைவை வகைகள்.

வீட்டுப்பாவனைக்குகந்த சகல பொருட்களும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

## எழிலகம்

(பகுதிகடை தொகுப்பு)
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7391)

# இசுரவேல் உருவாக்கும் இரண்டாவது சதாத்

**பாலகுமாரன்**

அரபு இசுரேலிய பேச்சு வார்த்தையைப் போல் ஒரு பெரும் எடுப்பில் நடக்கும் ஒரு பேச்சு வார்த்தையை இவ் உலகம் இது வரை கண்டதில்லை. உலகில் மிகமுக்கிய நாடுகள் பங்கேற்கும் இப் பேச்சு வார்த்தை கடந்த ஒக்ரோபர் 1991 ம் ஆண்டு ஸ்பெயின் தலை நகர் மாட்ரிட்டில் ஆரம்பமாகி இன்று 11-வது சுற்று வாசிங்டனில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இப் பேச்சு வார்த்தை பாலத்தீனிய தன்னாட்சி பற்றி மட்டுமல்ல இசுரேலுக்கும் அதன் அண்டை அரபு நாடுகளான சிரியா யோர்தான், லெபனானுக்கும் இடைப்பட்டபகை முரண்பாடுகளையும் தீர்க்க வேண்டும். ஆனால் இற்றை வரை எப்பயனும் - இசுரேல் தன் நல்லெண்ணத்தை காட்டி வழங்கிய ஒரு சில சலுகைகளைத் தவிர- கிட்டவில்லை. ஏற்கனவே பிளவுபட்டிருந்த பாலத்தீனத் தலைமை இப்பேச்சு வார்த்தைகளால் மேலும் பிளவுண்டது. 1967-ம்ஆண்டின் பின் இசுரவேலால் வெளியேற்றப்பட்ட முதல் பாலத்தீனியரும் பாலத்தீனிய நிழல் நாடாளுமன்றின் சபாநாயகருமான அப்துல் கமித் அல்சாயா இப் பேச்சுக்களறிந்து அண்மையில் வெளியேறியபோது ''இது பேச்சுவார்த்தையல்ல சரண் அடைவதற்கு பிரயோகிக்கப்படும் நிர்ப்பந்தம் என்றார். ''என்னைப் பொறுத்தவரை இப்பேச்சுவார்த்தை மூலம் பாலத்தீனியருக்கு செய்யப்படப் போகும் தீங்குகட்கு நான் பொறுப்பாக இருக்கவிரும்பவில்லை''.எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான குழப்பநிலையிருக்கும் போதுதான் இனி ஒரு பேச்சுவார்த்தை பற்றி தகவல் வெளிவந்தது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நோர்வே அரசின் உதவியோடு இசுரேலியர்க்கும் அரபாத்தரப்பினர்க்கும் நோர்வேயில் நடைபெற்றுவரும் இரகசியப் பேச்சுவார்த்தை பற்றி தகவலே இது பாலத்தீனிய விடுதலை அமைப்பிற்கோ அல்லது தனது அல்-பத்தா அமைப்பிற்கோ தெரியாமல் அரபாத் நடத்திய பேச்சுக்களில் எட்டப்பட்ட உடன்பாடுகள் பற்றிய தகவல்கள் பல முழுமையாக வெளிவந்தபோதும் - வந்தவையில் சில முரண்பாடுகள் இருந்த போதும் இதன் அடிப்படைகள் பின்வருமாறு அமையும் எனத் தெரிகிறது. 1967-ம் ஆண்டு இசுரேலால் ஆக்கிரமிக்கப்பட்டகாசாப் பகுதிகள் மேற்கு கரையின் ஒரு பகுதியான ஜெரிக்கோ நகரத்தில் மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்குவதும் இசுரேலும் பாலத்தீனிய விடுதலை இயக்கமும் ஒருவரை ஒருவர் அங்கீகரிப்பதும் இதன் பிரதான அமிசமாகும். ஆதே சமயம் தனது இராணுவத்தை இப்பகுதிகளிலிருந்து வெளியேற்றும் என்றும் வெளிவிவகாரம் இசுரேலிய குடியேற்றங்கள் பாதுகாப்பு போன்றவை இசுரேல் கையில் இருக்கும் என்றும் உடன்பாடு கூறுகிறது. மாற்றாக பாலதீனிய விடுதலை இயக்கம் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு உத்தியோக பூர்வமாக இசுரவேலை அங்கீகரித்து, தேவையான மாற்றங்களை தனது தேசிய சாசனத்தில் செய்யவும் சம்மதித்துள்ளது. அத்தோடு இன்ரிபாதா மக்கள் எழுச்சியை நிறுத்த வேண்டும் என்றும் 5வருட இடைக்கால திட்டமாக அமைதித்திட்டம் அமையும் என்றும் மூன்றாம் வருடத்தில் ஏனைய தீர்க்கப்படாத பிரச்சினைகள் பற்றி பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என்றும் உடன்பாடு கூறுகிறது. ஜெரிக்கோவிலும் காசாப் பகுதியிலும் நிலங்கள் காவல் துறைப் பணிகளிற்கும் பாலத்தீனியர் பொறுப்பில் விடப்படும் என்றும ஏற்கப்பட்டுள்ளது. அதே சமயம் மேற்குக் கரையையும் யோர்தானையும் தொடுக்கும் யோர்தான் நதிப் பாலம் இசுரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும். இவ் உடன்பாடு இன்று உலகத்தலைநகரில் பெரும் பரபரப்பை தோற்றுவித்ததோடு பற்பல உணர்வலைகளை இன்று உலகம் மெங்கும் கிளப்பியுள்ளது.

பாலத்தீனிய மக்கட்கு அமைதி கிட்டுவதை எவரும் எதிர்க்க விரும்பாத போதும் இம்மாதிரியான ஒரு அரைவேக்காட்டுத் திட்டம் எத்தகைய பலன்களை பாலத்தீனிய மக்கட்கு அளிக்கும் என்பதுதான் இன்றைய கேள்வியாகிறது. ஏனென்றால் பாலத்தீனிய சுதந்திர நாட்டை முதலில் கொடு பின் பாலத்தீனிய தன்னாட்சி என இறக்கி அதுவுமின்றி மட்டுப்படுத்த தன்னாட்சி அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட பகுதிகட்கு என்பது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் பாலத்தீனிய மக்கட்கு எவ்வாறு ஆனந்தத்தை கொடுக்க முடியும்? மேலெழுந்த வாரியாக பார்க்கும் போதே பல நூறு சிக்கல்கள் இவ்வுடன்பாடு பற்றி கிளம்புகின்றது. கடந்த 26 வருடங்களாக அடக்குமுறையின் கொடுங்கரங்களில் சிக்கி தன்னியல்பாக 1987ம் ஆண்டிலிருந்து கிளர்ந்து எழுந்து போராடி வரும் இசரவேல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை. காசாப் பகுதி மக்கள் இவ்வுடன்பாட்டை ஏற்பார்களா என்பது சந்தேகமே ஏனென்றால் இதுவரை காலமும் 'நீங்கள் போராடுங்கள் நாங்கள் ஆதரிக்கின்றோம்' எனக் கூறிவந்த அரபாத் இப்போது ''நாங்கள் சொல்கிறோம். நீங்கள் கேட்டுநடவுங்கள்'' என தன்னிச்சையாக செயற்பட முற்படுகின்றார் என இம்மக்கள் கருதுவதாக தெரிகின்றது இவற்றை விட வெளி உலகிற்கு நல்லெண்ணத்தை காட்டும் இசுரவல் இம் மக்கட்கு இழைக்கும் கொடுமைகளை எவ்விதத்திலும் இற்றை வரை குறைக்கவில்லை. குறிப்பாக தனது திட்டமிட்ட குடியேற்றங்களை மேன் மேலும் விரிவாக்கும் முயற்சியே நடைபெறுவதாக இம் மக்கள் குறைபபடுகின்றனர். இன்றும் புல்டோசர்கள் புதிய யூதக் குடியேற்றங்கட்காக நிலங்களை சமப்படுத்துவதாகவும் 1 இலட்சம் யூதர் குடியேறும் வகையில் 15,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட பணிகள் முடுக்கி விடப்பட்டதாகவும் தெரிகின்றது.இத்தகையநிலையில்வளம் குன்றியவறுமைநிரம்பியகாசாத்துண்டுக்கும் மேற்குக் கரையின் ஒரு பகுதிக்கும் உரிமைகள் வழங்குவது என்பதே விசித்திரமானது ஏனென்றால் நீர்வளம், நிலவளம் உள்ள மேற்குக் கரையில் 70 வீதம் நீர்வளம் வெளிநிலங்கள் இசுரவேலால் கையகப் படுத்தப் பட்டிருப்பதை இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் இப்போது கோலான் குன்று பகுதியில் 12,000 பேரும்மேற்குகரையில் 1½ இலட்சம் யூதக்குடியேற்ற வாசிகளும் உளனர் எனவே இத்தகைய யூதக்குடியேற்றங்கள் பாலத்தீனியர் தன்னாட்சிப் பகுதிக்குள் வராது. என்பது வெளிப்படை எனவே மீதியிருக்கும் பாலத்தீனிய தாயகப் பகுதிகள் பற்றிய பேச்சுக்கள் அடுத்தகட்டமாக 3 வருடங்களின் பின்னே ஆரம்பமாக்கப்படும் எனத் தெரிகிறது அதேசமயம் இரு பகுதியினருக்குமே மிக உயிர் நாடியாக விளங்கும் ஜெருசலேம் நிலை புரியாதபுதிராக இருக்கிறது. பாலத்தீனம் கொடி ஜெருசலேத்தில் பறக்கும் என அரபாத்தும் எத்தருணத்திலும் ஜெருசலேம் கைவிடப்படமாட்டாது என றாபினும் அறைகூவி வருகின்றனர். ஜெருசலேத்திலோ படிப்படியாக மிக வேகமாக யூதக் குடியேற்றங்கள் வளர்கின்றன. இன்று கிழக்கு ஜெருசலேம் பகுதியில் ஓர் இலட்சத்து அறுபதினாயிரம் யூதரும் 1½ இலட்சம் பாலத்தீன அரபுகளும் உள்ளதாக சனத்தொகை விகிதம் மாற்றப்பட்டு விட்டது. எது எப்படியிருந்த போதும் ஜெருசலேம் தமது தலைநகரம் என இரு பகுதியுமே விடாப்பிடியாக நிற்கப்போகிறார்கள் என்பது மிகத் தெளிவு.

இவை எல்லாவற்றையும் விட தமது தாயகப் பகுதியில் இருந்து - வெளியேற்றப்பட்ட பாலத்தீனியஅகதிமக்கள்எதிர்காலம் என்ன என்பது கேள்விக்குறியாகவேஉள்ளது. 1948 ஆம் ஆண்டு ஐ நா. ஏற்பாட்டின்படி பாலத்தீனியப் பகுதி துண்டாடப்பட்டு யூதர்க்கென தனியான தாயகப் பகுதி உருவாக்கப்பட்டபோது மூண்ட போரில் ஏறத்தாழ சனத்தொகையில் அரைவாசி மக்கள் (7½ இலட்சம் பேர்) அகதிகளாக அண்டை நாடுகளிற்கு ஓடினர். 1948 ஆம் ஆண்டு யூதர்கையில் இருந்தது பாலத்தீனிய நிலங்களில் 6 வீதம் மட்டுமே. ஆனால் தமது சியோனச கோட்பாட்டின் படி (சியோனிச கோட்பாட்டை உருவாக்கிய தியோடர் கேர்சல், Theodore Herzl) வலியுறுத்திய அகன்ற இசுரேல் பாலத்தீனிய நிலங்களை கையகப்படுத்த தொடங்கிய தன் விளைவாக மூண்ட 1967-ம் ஆண்டு போரின் போது எஞ்சியிருந்த எகிப்து, யோர்தான் கையிருந்த-தமது தாயகப் பகுதிகளையும் பாலத்தீனர் இழந்தனர். அப்போது 5 இலட்சத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாகினர். 1967 போரின் முன் மொத்த பாலத்தீன சனத்தொகை 21 இலட்சம் பேர் மேற்குக் கரையிலும் 4 இலட்சம் பேர் காசாப் பகுதியிலும் இருந்தனர். போரின் பின் 15 இலட்சம் பேர் அகதிகளாகவும் 12 இலட்சம் பேர் அடிமைகளாகவும் மாற்றப்பட்டனர்.எனவே இன்று 20 இலட்சம் பேர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் ஏறத்தாழ 40 இலட்சம் பாலத்தீனியர் பாலத்தீனிய தாயகத்திற்கு வெளியே வாழ்வதாக கருதப்படுகின்றது. இவர்களில் கணிசமான பங்கினர் தாயகம் திரும்ப தயாராக இருப்பர் என்பது வெளிப்படை இவர்கள் நிலை என்னவென்பது சிக்கலான வினா. இப்போது மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்கப்படவிருக்கும் காசாவில் 8 இலட்சம், ஜெரிக்கோவில் 9 ஆயிரம் பாலத்தீனியர் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்காரணிகளை விட பாலத்தீனிய விடுதலை இயக்கத்தில் அங்கம் வகிக்கும் ஜோர்ஜ் கபாஸ் தலைமையில் இயங்கும் தீவிரத் தன்மை வாய்ந்த PFLP மற்றும் DLFR போன்ற அமைப்புகள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில இயங்கும் ''கமாஸ்'' இயக்கம் தென் லெபனானில் சிரிய கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஈரானின் ஆதரவோடு இயங்கும் 'கிஸ்புல்லா' அமைப்புபோன்றவை இவ்வுடன்பாட்டினை முறியடிப்போம் என சூளுரைத்து நிற்கின்றன. குறிப்பாக இசுரேலுக்கு எதிராக தனது ஆயுதப்போராட்டத்தை விரிவுபடுத்தி வரும் கமாஸ் இயக்கம் உடன்பாட்டினபடி என்றோ ஒரு நாள் தாயகம் திரும்ப எண்ணியிருக்கும் யாசீர் அரபாத்திற்கு பெரும் எதிர்ப்பையே காட்டப்போகின்றார்கள் என்பது திண்ணம். 'சதாத்துக்கு நடந்ததை அரபாத்திற்கு ஞாபகப்படுத்துகிறோம்'' என தீவிரவாத பாலத்தீனிய தலைவர் அகமட் ஜிப்ரில் பெய்ரூட்டில் கூறியுள்ளார். இசுரவேலோடு தனித்து காம்ப்டேவிட் ஒப்பந்தம் செய்த எகிப்திய சனாதிபதி அன்வர் சதாத் 1981 கொலை செய்யப்பட்டமையே அவர் நினைவுபடுத்தினார் கமாஸ் இயக்கமோ ''பேச்சுக்கள் நடத்துவோரின் கூக்குரலை விட புனிதப் போராளிகளின் துப்பாக்கி ரவைகள் மிக மேலானவை'' எனக் கூறி காசாப் பகுதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தத் தொடங்கிவிட்டனர்

எனவே இத்தகைய அபாயங்கட்கு மத்தியில் ஏன் இம் முயற்சியில் அரபாத் ஈடுபட்டுள்ளார்? இங்கே தான் வரலாறு ஒரு முக்கிய பாடத்தை உலகிற்கும் போராடும் இயக்கங்களிற்கும் புகட்டுகின்றது, ஆயுதப் போராட்டத்தை நடாத்திய இசுரேலிய இயக்கங்கள் மீது தாக்குதல் நடாத்தியபோது தீவிர பயங்கரவாதி என வருணித்த இசுரேல் இன்று அரபாத்தை காப்பாற்றுவது தன் பொறுப்பு என முற்பட்டிருப்பதுவரலாறு காட்டும் ஒரு பழைய பாடம் தான். ஏன் எனில் இன்று தனது பழைய தீவிரத் தன்மையை இழந்து (ஒருகாலத்தில் பாலத்தீனிய போராட்டத்தை நான் மணமுடித்துள்ளேன் என்றவர் இன்று தனது 60-வது வயதில் பாலத்தீனிய பெண் ஒருத்தியை மணமுடித்துள்ளார் என்பது செய்தி). தனது தலைமைப் பதவியின் இறுதிக் கட்டத்தில் போராடவும வழியற்று இடிப்பதற்கு எதுவும் அற்றுதனித்துப்போய் விட்டார். அரபாத் இராசதந்திரப் போராட்டம் நடாத்தி உலகெல்லாம் தூதுவர் அலுவலகங்களைத் தொடக்கி உலக ஆதரவைப் பெற்றவர் தனது மக்களின் முழு ஆதரவைப் பெற முடியாமல் தவிக்கின்றார். மிகுந்த பண நெருக்கடியில் சிக்கி இருக்கும் அவர் தனது இறுதிக் காலத்திலாவது தாயகம் செல்ல கிடைக்கும் எவ் வழியையும் பற்றித் தொங்கத் தயாராகிவிட்டார். எனவே இப்போது முழு மேற்குலக ஆதரவு; இசுரவேல் அங்கீகாரம்! எகிப்து, சவுதி, குவைத் போன்ற வளைகுடா நாடுகள் உதவி; யோர்தான் அமோதிப்பு. [ஆரம்பத்தில் எதிர்ப்புக்காட்டிய யோர்தான் அமெரிக்க நல்லுறவை விரும்பி இப்போது ஆமோதிப்பு. இச் சமாதான முயற்சி ஒரு தொடக்கமே பின்படிப்படியாக பேச்சுக்கள் தொடரும் என்ற வாதம்; அமெரிக்க உத்தரவாதம் இவற்றை நம்பி அவர் தன்னையே பணயம் வைத்து இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதே சமயம் இசுரவேலோ இம்மாதிரி தருணம் இனிமேல் கிடைக்காது என எண்ணி செயற்படுகிறது. இதனாலே வழமைக்கு மாறான அறிவிப்புக்கள் ரெல் அவிவிலிருந்து இப்போதுவெளி வருகின்றன இப்போது பல மற்றிருக்கும் பா.வி,இயக்கத்தோடுபேசாவிட்டால் பின்னர் பிடிவாதம் தீவிரவாதம் மிக்க கமாஸ் போன்ற அமைப்புக்களோடு பேசநேரிடும் என்பது இசுரவேலிற்கு விளங்கும் ஆனால் தொடக்கத்தில் பா.வி.இயக்கத்திற்கு எதிராக கமாஸ் இயக்கம் தோன்றி வளர்ந்த போது கண்டும் காணாமல் இசுரவேல் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது இன்று கதையே மாறிவிட்டது அத்தோடு நாட்டிலே பெரும் பணவீக்கம், பொருளாதார நெருக்கடி, அமெரிக்க அழுத்தம். தேர்தல்காலவாக்குறுதி, அமைதி வேண்டும் மக்கள் மனோநிலை என்பன ஏனைய காரணங்கள்

அமெரிக்காவை பொறுத்தவரை தான் நம்பகரமான தரகன் என்பது நிருபிப்பதாக வேண்டிய நிலை, மத்திய கிழக்கில் தானும் தனது அரபுலக நண்பர்களும் செல்வாக்குடன் இருக்க நியூயோர்க் வெடிகுண்டு வெடிப்புக்கள் போன்ற சம்பவங்கள் தொடராமல் பாதுகாக்க இசுரவேல்-அரபுகளிடையே சில காலமாவது நல்லெண்ணம் நிலவுவது அவசியமாகிறது இந்நிலையில் சிரியாவோ ஒரு தடையாக இருக்க முடியும் ஆனால் சிரியா கோலான் குன்றுகள் தன்னிடம் ஒப்படைக்கப்படுமானால் லெபனானில் இருந்துகிஸ்புல்லா இசுரவேல் மேல் செய்யும் தாக்குதல்கள் தடுத்து விடும் என்கிற பேரத்தை சிரியா விட்டுள்ளது. இவ்வுடன்பாட்டைமுழுமையாக ஆதரிக்காத போதும் தான் குறுக்கே நிற்கப் போவதில்லை என்றும் பாலத்தீனிய மக்கள் தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிப்பதை தான் தடுக்கவில்லை என்றும் சிரிய சனாதிபதி கூறியுள்ளார் ஏன்றாலும் அரபு நாடுகளின் கரங்களை வெகுவாக பலவீனப்படுத்தி விட்டார் என்று அரபாத் மேல் கசப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிகின்றது.இப்போது சிரியா தன் செல்வாக்கில் உட்பட்டு இருக்கும் அரபாத்திற்கு எதிரான குழுக்களை எவ்வாறு கையாளப் போகின்றது என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம் கோலான் குன்று பகுதியை பெறும் தனது முயற்சிகளில் மட்டும் சிரியா இனி மேல் ஈடுபடப் போகின்றது என்பது வெளிப்படை. இவ்வாறாக எல்லாத் தரப்பினாலும் பாலத்தீனிப் மக்கள் பிரச்சினைமையமாக வைத்து தத்தம் பிரச்சினைகளை தீர்க்க முற்படும் ஒரு விந்தை நிலையே இன்று தெரிகின்றது; இவ்வாறாக இன்று பாலத்தீனியப் பிரச்சினையின் மையம் சிதைக்கப்பட்டு அரபாத்தின் தலைமை கேள்விக்குரியதாக மாற்றப்பட்டு விட்டது என்றாலும் ஒரு காலகட்டத்தில் பாலத்தீனிய தேசிய அரசிற்காக அரபு நாடுகள் கையில் சிக்கியிருந்த பாலத்தீனியத் தேசியவாதத்தை மீட்டெடுத்து 1965 அளவில் முதல் தாக்குதல் இசுரவேலுக்கு எதிராக தொடுத்த பெருமை அரபாத்தை சாரும் 1969இன்பின் பாலத்தீனியவிடுதலை இயக்கத் தலைவராகி பாலத்தீனிய விடுதலையோடு இரண்டாகக் கலந்தவர் அதே சமயம் யோர்தானிலிருந்து 1970களில் விரட்டப்பட்டு பின் 1982, 83களில லெபனானில் இருந்தும் விரட்டப்பட்டு அரபு நாடுகளின் போட்டா போட்டிகளில் சிக்கி சிதறடிக்கப்பட்டிருந்த பாலத்தீனிய தேசிய வாதத் தலைமையும் பட்டதுயரங்களும்வரலாற்றில் மறக்கப்படப் போகின்றவை அல்ல. அல்லது 1970களில் உலகை உலுப்பிய பல தாக்குதல்களை, விமானக் கடத்தல்களை மேற்கொண்டு மிகத் தீவிர வன்முறை வழிகளைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

# இடம்பெயர்ந்த பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

யாழ். மாவட்டத்தில் தொடரும் இராணுவ தாக்குதல்களினால் பண்டத்தரிப்பு, வேலணை, வடமராட்சி கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த 112 பாடசாலைகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கி வருகின்றன, இப்பாடசாலைகளும், இவற்றில் கல்வி கற்கும் சுமார் 22,000க்கும் அதிகமான மாணவர்களும் எதிர்நோக்கும் நிர்வாக, கற்றல், கற்பித்தல், அடிப்படை வசதிகள் சார்பான பிரச்சினைகள் பற்றி மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் கீழ்வரும் கருத்துக்கள் பெறப்பட்டன.

பிரச்சினைகளை எளிதில் உணர்ந்து கொள்வதற்காக ஒவ்வொரு கோட்ட ரீதியிலாக தகவல்களும் தரவுகளும் தரப்படுகின்றன.

## பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்

பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்தைப் பொறுத்தவரை சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் இரண்டு பாடசாலைகளும், சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் 13 பாடசாலைகளும், தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவில் 37 பாடசாலைகளும், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் 14 பாடசாலைகளுமாக மொத்தம் 66 பாடசாலைகள் இடம்பெயர்ந்து இயங்கி வருகின்றன.

இடம்பெயர்ந்த பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் பலர் வேறு பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதி தேடிக் கொண்டமையினாலும், கல்வியை சிலர் இடைநிறுத்திக்கொண்டமையாலும் இன்று 17 பாடசாலைகள் மாணவர்கள் எவருமற்றநிலையில், ஆசிரியர்களும் தற்காலிக இடமாற்றம் பெற்ற நிலையிலுமாக அதிபர்களை மட்டுமே கொண்டு இயங்கி வருகின்றன. இவற்றில் அதிகம் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறைக் கொத்தணியில் 07 பாடசாலைகளும், காரைநகர்க் கொத்தணியில் 06பாடசாலைகளும், அதிபர்களை மாத்திரம கொண்டு காற்று வாங்குவதுகுறிப்பிடத்தக்கது. இவற்றிலும் ஓரளவு குறைந்த எண்ணிக்கை மாணவரையேனும் சேர்த்து இயங்க வைக்க வேண்டுமென கல்வித் திணைக்களம் மேற்கொண்ட முயற்சியினால் இவ் எண்ணிக்கை 14 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இது இவ்வாறு இருக்க மற்றைய பாடசாலைகள், சிலவேறு நிரந்தரமான பாடசாலைகளில் தனித்து காலை நேரப் பாடசாலைகளாகவும் வேறு சில மாலை நேரப் பாடசாலைகளுமாக இயங்கி வருகின்றன. இன்னும் சில, தற்காலிக கொட்டகைகளை அமைத்து காலைநேரப் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன. பொதுவாக இப்பாடசாலைகள் போதுமான இடவசதியோ, தளபாட வசதிகளோ இன்றி இவை இயங்கி வரும் அதேவேளை, பெரும்பாலான இப்பகுதிபாடசாலைகள் மாலை நேரங்களில் இயங்குவதன் காரணமாக எழும் பிரச்சினைகள் முக்கியமானவை.

## மாணவர் எதிர்நோக்கும் துன்பங்கள்

மதியம் ஒருமணிக்கு ஆரம்பமாகும் இப்பாடசாலை விமாலை ஐந்து மணிக்கு முடிவடைகின்றன. மற்றைய பாடசாலைகள் ஆறு மணித்தியாலங்கள் இயங்கும் நிலையில் இவை நான்கு மணித்தியாலங்களே இயங்கி வருகின்றன. காலையில் புத்துணர்ச்சியோடு கற்பித்தலை மற்றைய மாணவர்கள் எதிர்நோக்க இவர்கள் நாளின் பெரும் பகுதியை வெறுமனே கழித்த நிலையில், மனம் சோர்ந்து களைப்புற்ற நிலையில் கல்வி கற்க ஆரம்பிக்கிறார்கள். தகுந்த உடற் பயிற்சிகளோ கல்வி சார் நடவடிக்கைகளோ கைக்கெட்டாத நிலையில் இவர்களின் கற்றல் நடைபெறுகிறது. மற்றைய மாணவர்கள் போலவே ஒரே பொதுப்பரீட்சைகளை எதிர்நோக்கும் இவர்களின் கற்றல் நேரம் நாளொன்றுக்கு இரண்டு மணிநேரங்களால் குறைவுறின் பாடத்திட்டத்தை குறிப்பிட்ட காலவெல்லையில் நிறைவாக்குவதென்பது முடியாத காரியமே. இந்த சிக்கலை தீர்க்க சில பாடசாலைகள், கிடைக்கும் வெற்றுகாணிகளில் கொட்டகைகளை அமைத்து காலை நேரப் பாடசாலைகளாகமாறியுள்ளன. எனினும் மாணவரெண்ணிக்கை அதிகமாக உள்ள பெரிய பாடசாலைகள் இன்றைய நிலையில் இவ்விதம் பல கொட்டகைகளை தற்காலிகமாகவேனும் அமைத்து இயங்குவதென்பது சிரமமான விடயமென்பது வெளிப்படை. தூர இடங்களிலிருந்து முன்னர் கற்ற பாடசாலையிலேயே கல்வி கற்க வேண்டுமென ஆவலோடு வரும் மாணவர்கள் பாடசாலை முடிந்து வீடுவந்து சேரும் நேரம் இரவாகிவிடுகிறது இதனால் பல பெற்றோர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு மதியம் அழைத்து வந்து கல்வி கற்கும் வரை காத்திருந்து பாடசாலை முடியும் வேளை அழைத்துச் செல்வதும் சாதாரணமாகிவிட்டது.

இவை மாலைநேர பாடசாலைகளுக்கான தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கும் வேளையில், இரு நேரப் பாடசாலைகளும் பல பொதுவான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இடம்பெயர்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலலாமே? எனப் பலரால் வினா எழுப்பப்படுகின்றமை வழக்கமானதொன்று. "ஆம் பயிலலாம். ஆனால் அவ்வாறான பாடசாலைகளின் அதிபரோ, ஆசிரியர்களோ இதய சுத்தியுடன் செயலாற்ற முடிந்தால்" என கூறினார் இடம் பெயர்ந்த பெற்றார் ஒருவர். இதற்கு சான்றாக பல சம்பவங்களை உதாரணம்காட்டினார் அவர். குறிப்பிட்ட பிரதேசத்தில் இயங்கும் பாடசாலையொன்றில், இடம்பெயர்ந்த மாணவர்கள் சிலர் கல்விகற்க அனுமதிக்கப்பட்டபோது, சகமாணவர்கள் கதிரைகளில் இருந்து கல்வி கற்க, இவர்கள் நிலத்திலிருந்து கற்க பணிக்கப்பட்டார்கள். இன்னொரு சம்பவத்தில், வேறு பாடசாலையொன்றில் இடம் பெற்ற விளையாட்டுப்போட்டியொன்றில், இடம்பெயர்ந்த மாணவனொருவன் முதலிடத்தைப் பெற்றபோது, பிறப்புச் சான்றிதழை இழந்திருந்தம் மாணவனின் தெரிவு, பிறப்புச் சான்றிதழ் இல்லை எனக் காரணம் காட்டி நீக்கப்பட்டது. இதனால் இம்மாணவர்கள் தொடர்ந்தும் தாம் கல்வி கற்ற பாடசாலையிலேயே, வாய்ப்புகள் வசதிகள் இல்லாதிருந்தும் கல்வி கற்க வேண்டியநிலை உருவானது. குறிப்பிட்ட பாடசாலையொன்றில், தற்காலிகமாகஇயங்கும் - இடம்பெயர்ந்தபாடசாலையொன்றின் மாணவர், ஒழுக்க நடவடிக்கைகளினால் கவரப்பட்ட நிரந்தரப் பாடசாலை மாணவர்கள் பலர், தற்காலிகமாக இயங்கி வந்த பாடசாலையில் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். இதன் காரணமாக எழுந்த நிர்வாக ரீதியான பிரச்சினைகளினால் அந்தத் தற்காலிக பாடசாலை மாணவர்கள் முன்னர் தரப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில், சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ள இன்னொரு பாடசாலையில் ஆய்வுகூட வசதிகள் பெற்று கல்வி கற்று வருகிறார்கள். பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைப்பொறுத்தவரை எந்த ஒரு இடம்பெயர்ந்த பாடசாலையும், நூலக வசதியைக் கொண்டு இயங்குவதாக தெரியவில்லை

மாணவர் எண்ணிக்கை குறைவான, உயர்தர வகுப்புகளைக் கொண்ட சில பாடசாலைகள் தாங்கள் தாங்கள் தங்கியிருக்கும்பாடசாலைகளுடன் வகுப்புகளை ஒன்றிணைத்து இருபாடசாலைஆசிரியர்களின்ஒத்துழைப்புடன்ஒரேநேரசூசியின்படி இயங்கி வருகின்றன. இதனால் வளப் பிரயோகம் வீணாகாதவாறு தடுக்கப்படும் நிலையுமுள்ளது.

> கல்வி அபிவிருத்தித் திட்டங்களைப் பாடசாலைகளில் ஆரம்பித்து கல்வித் திணைக்களம்வரை அதிகாரிகளை நியமித்தும், குழுக்களையும் அமைத்துவரும் கல்வித் திணைக்களம பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு ஏதுவான நடவடிக்கை எடுப்பதும அவசியமாகும்.
>
> - ரகுராம்

ஆனாலும், தம் தனித்துவத்தை பேணுவதற்காக இப்பாடசாலைகள் வேறு வேறான விளையாட்டுப் போட்டிகளையும், பரிசளிப்பு விழாக்களையும் நடாத்தி வருகின்றன.

முன்னரே குறிப்பிட்டது போல் இடம்பெயர்ந்த மாணவர்கள், தம் பாடசாலையை விட்டு, வேறு பாடசாலையொன்றில் அனுமதிபெறும் பட்சத்தில் அந்நிரந்தரப் பாடசாலை அதிபர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவ்வாறான பாடசாலைகளின் அதிபர்கள் சிலரை சந்தித்த போது; "இடம்பெயர்ந்த மாணவர்கள் அனுமதி கோரினால் எந்த ஒரு ஆவணமுமின்றி பழைய பாடசாலை அதிபரின உறுதியோடு அவரை பாடசாலையில் இணைத்துக் கொள்ளலாம் என கல்வித் திணைக்களத்திலிருந்து சுற்றறிக்கை விடப்பட்டது. ஆனால் அவர்களுக்கு தேவையான இலவசப் பாடப் புத்தகங்களோ, தளபாடங்களோ சரியான முறையில் வழங்கப்படவில்லை" கல்வியதிகாரிகளிடம் பிரச்சினைகளை கூறும்போது அவர்கள் அடுத்த முறை அப்பாடசாலைக்கு வருவதை தவிர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள் என தெரிவித்தார்கள். எந்த ஒரு மாணவரும் மூன்று மாத காலம் தொடர்ந்து பயின்றால், அவர் அந்தப் பாடசாலை மாணவர்களாகவே கருதப்பட வேண்டும் என்ற கருத்தும் வலுப்பெற்றிருந்தது. ஆயினும் சில அதிபர்கள் இதனைப பின்பற்றுகிறார்கள் சில அதிபர்கள் இன்னும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான தனியான வரவுப் பதிவேடுகளை பேணும் நிலை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

எது எப்படியிருப்பினும் கல்வி அபிவிருத்தி திட்டமிடலுக்கென பாடசாலைகளில் ஆரம்பித்து கல்வித் திணைக்களம் வரை அதிகாரிகளையும் குழுக்களையும் அமைத்து வரும் கல்வித் திணைக்களம் இத்தகு பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு தகுந்த ஏதுவான நடவடிக்கைகளை எடுப்பதும் தங்கள் கடமைகளில் ஒன்று என்பதை உணர்ந்து கொள்வல் அவசியமாகும்.

## வேலணைக் கோட்ட நிர்வாகச் சிக்கல்

வேலணைக் கோட்டத்தைப் பொறுத்தவரை மூன்றிலிரண்டு பங்கு பாடசாலைகள் முற்றாக இடம்பெயர்ந்த நிலையில் யாழ்நகர் முதல் கெற்பலி வரை இயங்கி வருகின்றன மொத்தமாக வேலணைக் கோட்டத்திலுள்ள அறுபத்தாறு பாடசாலைகளில் ஊர்காவற்றுறைக் கொத்தணியைச் சேர்ந்த 11 பாடசாலைகளும், வேலணைக் கொத்தணியைச் சேர்ந்த 11 பாடசாலைகளும், மண்டைதீவுக் கொத்தணியைச் சேர்ந்த 07 பாடசாலைகளும், புங்குடுதீவுக் கொத்தணியைச் சேர்ந்த 13 பாடசாலைகளுமாக 42பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையிலும் நயினாதீவு, நெடுந்தீவு கொத்தணிகளைச் சேர்ந்த 24 பாடசாலைகள் தம்சொந்த இடங்களிலுமாக இயங்கி வருகின்றன.

ஆரம்பத்தில் இப்பாடசாலைகள் இடம்பெயர்ந்து இயங்காமலிருந்த பட்சத்தில் மாணவர்கள் தாங்கள் தங்கியிருந்த இடங்களுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக அனுமதி பெற்று கல்வி கற்க ஆரம்பித்தார்கள்.

நிலைமை தீவிரமடைய, இடம்பெயர்ந்த பாடசாலைகள் தற்காலிகமாகவேனும் இயங்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் எழுந்தன இந்நிலையில் பாரிய நிர்வாகச் சிக்கல் ஒன்று எழுந்தது அதாவது வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகம் நிதி சம்பந்தமான ஆவணங்கள் தவிர்ந்த ஆசிரியர் சுய விபரக்கோவை மற்றும் மிக முக்கிய ஆவணங்களை திதையும் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் இழந்தே வந்திருந்தமையும் ஆரம்பத்திலேயே இடம்பெயர்ந்த காரணத்தினால் ஊர்காவற்றுறைக் கொத்தணியும் வேறு மூன்று பாடசாலைகளும் மாத்திரமே தம் அலுவலக ஆவணங்களைக் கொண்டு வந்திருந்தன. இந்நிலையில் மாணவர்கள் பற்றிய ஆவணங்களின்றி அறிமுகங்களை மட்டும் வைத்தே வேறு பாடசாலைகளில் தற்காலிகமாக கல்வி கற்ற மாணவர்களையோ, தொடர்ந்து கல்வி கற்காதிருந்த மாணவர்களையோ அனுமதிக்க வேண்டி வந்தது. இன்றும் இப்பிரச்சினையினால் மாணவர்கள் தகுந்த விடுகைப் பத்திரமோ, பிறப்புச் சான்றிதழோ இன்றிகடற்கரைத் தாளங்காயாய் அலைந்து கொண்டிருப்பது கவனத்துக்குரியது.

இவ்வாறான சிக்கல்கள் மத்தியிலும் பாடசாலைகள் சில ஒன்றுசேர்ந்தும், சில தனித்தும் இயங்க முற்பட்டது.

இந்நிலையில் மூன்றிலொரு பங்கு ஆசிரியர்கள் தமிழீழத்திற்கு வெளியே சென்றநிலையில் மீதமுள்ள ஆசிரியர்களை வைத்து இயங்க எத்தனிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேற்படி பாடசாலைகளின் மாணவர்கள் வெவ்வேறு புதிய பாடசாலைகளில் சேர்ந்து கொண்டமையினால் ஆசிரியர்களிருந்தும் கல்வி கற்க மாணவர்கள் இல்லாத நிலை ஆரம்பத்திலிருந்தது.

ஒருவாறாக கெற்பலியில், தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிள்ளைகளுக்காக ஆண்டு ஒன்று முதல் ஆண்டு பதினொன்று வரையிலான பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டு ஆசிரியர்கள் பெருத்த சிரமங்களின் பின் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள், இதேபோல நாவற்குழி, அரியாலைப் பகுதிகளிலுள்ள வேலணைக் கோட்ட மாணவர்களை ஒன்று திரட்டி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கென தனியான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியேற்படுவதற்கு பின்னால் பல கசப்பான, தமிழர்களின் சாபக்கேடான உண்மைகள் மறைந்துள்ளன. ஓர் உதாரணமாக அரியாலைப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் ஒரே வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்களைப் பரிசோதித்த சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர், 'தான் முன்னர் பரிசோதித்து வந்த மாணவர்களுக்கேசுகாதாரப் பரிசோதனைகள் நடாத்துவேன். இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அவர்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வந்து பரிசோதனை செய்யட்டும்'' எனக் கூறியிருக்கிறார். இதுபோல பல சம்பவங்கள் பரவலாக நடந்துள்ளன.

இப்பாடசாலைகளை விட, யாழ் நகரப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையங்களிலும், சில பாடசாலைகளிலுமாக, தீவகப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இத்தகு தனியார் கல்வி நிலையங்கள் மலசலகூட வசதிகளையோ, குடிநீருக்கான வசதிகளையோ பெரியளவில் கொண்டிராமலிருப்பது தெரிந்த தொன்று. இந்நிலையில் காலை தொடக்கம் மதியம் வரை பல மணி நேரமாகக் கல்வி பயிலும் மாணவர்களின் நிலையைக் கூறுவதெப்படி?

இப்படியான சிலபாடசாலைகளில ஒவ்வொரு வகுப்பிலும் சராசரியாக பத்து மாணவர்கள் மாத்திரமே கல்வி பயில்வதுகுறிப்பிடத்தக்கது.நாளை இந்த மாணவர்களும் வேறு பாடசாலைகளுக்குச் செல்லின் இந்தப் பாடசாலைகள் எவ்வாறு இயங்கப் போகின்றன என்பது கேள்விக்குறியே. திருநெல்வேலிப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் இயங்கும் இடம்பெயர்ந்த தீவகப் பாடசாலையொன்றில், புதிய முறையிலான கற்பித்தல் அண்மை வரை நடைபெற்று இப்போது நிறுத்தப்பட்டு விட்டதாக அறியப்படுகிறது அதாவது 1ஆம், 2ஆம் ஆண்டு மாணவர்கள் ஒரே வகுப்பிலும், 3-ம், 4-ம் ஆண்டு மாணவர்கள் ஒன்றாகவும். ஒரே வகுப்பில் வைத்து கல்வி புகட்டப்பட்டது. மாணவரின் உளவியலுக்கும், கல்வி உளவியலுக்கே முரணான இந்த வேதனையான நிகழ்வு பற்றி ஆராயப் புகுந்த போது, இப்பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பிலும் 3,4 மாணவர்களே கல்விகற்று வருகின்றனர் என்பது தெரிய வருகின்றது. ஆனால் மாணவர் தொகைக்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியர் தொகை மிகக்குறைவாகும். இந்நிலையில் வகுப்புக்கள் அதிகம். நேரசூசியின் படி ஒவ்வொரு வகுப்பு மாணவர்களுக்கும் வகுப்புகள் இடம்பெறறாக வேண்டும். இந்நிலையில் ஒரே ஆசிரியரே இரண்டு வகுப்புகளுக்கு ஒரே நேரத்தில

(9ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# குருத்துக்கள்

கே. ஆர். டேவிட்

எனது உடலில் புதியதொரு நரம்பு பிரசவித்து உடலெல்லாம் பிரவாகிக்கின்ற உணர்வெனக்கு முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு... நான் சமையல் விளையாட்டு விளையாடினேன். இன்று... இவர்கள் - 'அடிபாட்டு' விளையாட்டை விளையாடுகின்றனர்... எவ்வளவு மாற்றம்...! அதிலும்...

விளையாட்டுக்குக்கூட அவர்கள் பயந்தோட விரும்பவில்லை! அடிக்கத்தான் விரும்புகிறார்கள்... இதுதான் மிகப்பெரிய மாற்றம்!

''மாவீரர்கள் புதைக்கப்படுவதில்லை, அவர்கள் விதைக்கப்படுகின்றார்கள்'' என்று கூறுகின்றார்களே ... அந்த மாவீரர்கள் விதைக்கப்பட்ட நிலத்தில், மண்ணைக்குடைந்த எழுந்த குருத்துக்களா இவர்கள்!

''எடை கண்ணா வாருங்கோடா விளையாடுவம்...'' ரமணன், கண்ணனையும், அவனோடு நிற்கின்றவர்களையும் விளையாட அழைக்கின்றான். ரமணன், கண்ணன், பாலன், செந்தூரன், மயூரன், ராஜூ... எல்லோரும் ஒன்றுசேருகின்றனர். ரமணன் எல்லோருக்கும் தலைமை தாங்குகின்றான்.

நேரம் நாலரை மணியிருக்கும்.

பாடசாலையால் வந்து சாப்பாட்டை முடித்துக் கொண்டவர்கள் இங்கு வந்து கூடியுள்ளனர். சகலரும் ஒரு கொடிக்காய்கள்.

''கண்ணா - என்ன விளையாட்டடாவிளையாடுவம்...?'' ரமணன், கண்ணனிடம் கேட்கின்றான். ரமணனுக்கு என்றுமே கண்ணனிடம் அலாதிப் பிரியமுண்டு. கண்ணன் மிகவும் நல்லவன், எதையுமே சகித்துக் கொள்ளும் இயல்புள்ளவன்.

வீட்டுக்கும். வீட்டுக் கேற்றுக்கும் இடையேயுள்ள பதினைந்தடி நீளமான பாதையின் இடதுபக்கமாக நிற்கின்ற விலாட் மாமரத் தடியோடு நிற்கின்றான் ரமணன். கருவண்டு போன்ற ரமணனின் அழகிய கண்களின் பார்வைக் கோடுகள் கண்ணனின் உதடுகளைத் தொட்டு நிற்கின்றன.

ரமணனுக்கு ஒன்பது வயது; இந்த வீட்டின் கடைசி வாரிசு. ரவுணிலுள்ள பிரபல்ய கல்லூரி ஒன்றின் மாணவன். ரமணனும், கண்ணனும் மாமன் மருமகன் உறவிலுள்ளவர்கள். ஆனால் பார்வைக்குச் சகோதரர்களைப் போன்றவர்கள்.

''எடை கண்ணா என்ன விளையாட்டடா விளையாடுவம்...?'' ரமணன் திரும்பவும் கேட்கிறான்.

ரமணனின் வீடு.

வீட்டின் இடதுபக்கமாகத் தறிக்கப்பட்ட தென்னை மரத்தின் அடிப்பாகம்; அதன் மேல் கால்களைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருக்கின்றான் கண்ணன். தென்னங் குற்றியிலிருந்து சிறிது தூரத்தில் கிழங்கு பிடுங்கப்பட்டு, மூடப்படாத நீள்சதுர வடிவிலான பனம்பாத்திக் கிடங்கொன்று. அந்தக் கிடங்கைச் சுற்றி ஏனைய நால்வரும் நிற்கின்றனர்.

முற்றத்திலுள்ள தேக்க மர நிழலில் 'கன்வஸ்' கட்டிலில் நான் படுத்திருக்கின்றேன். ரமணனுக்கு நான் தாத்தா முறையில் உள்ளவன்.

''இவன் கண்ணனுக்கு ஒண்டுந் தெரியாது... எடை பாலா... நீ சொல்லடா... என்ன விளையாட்டு விளையாடுவம்...?'' கண்ணன் மீது தொடுத்திருந்த கேள்வியை இப்போது பாலா மீது தொடுக்கின்றான் ரமணன்.

இங்கு நிற்பவர்களில் வயதில் மூத்தவன் பாலா. அவனுக்கிப்போது பத்து வயது நடக்கின்றது.

''என்ன விளையாட்டு விளையாடுவம்...'' ரமணன் கேட்ட கேள்வி எனது செவிப்பறையில் பதிந்து... இதயத்தை நோக்கி விரைந்து...... என்னையறியாமலேயே எனது மனத்திலுள்ள அனுபவபக்கங்கள்புரட்டப்பட்டு...ஆரம்பகாலப் பதிவுகளில் நங்கூரமிடுகின்றது... பதினொரு வயதிற்கு இடைப்பட்ட காலம்.. நான் இவர்களைப் போன்ற சிறுவன்.

எனது வீட்டிற்கும் கிணற்றடிக்கும் இடையேயுள்ள பூவரசமரத்தடியில்... சாம்பல் குளித்த கோழிக்குஞ்சுகள்போல்... அரைகுறை அம்மணக் கோலத்தில்... எனது நண்பர்களோடு சோறு கறி சமைத்து விளையாடியதும் குரும்பட்டிகளை ஈர்க்கினால் பொருத்தி தேர் இழுத்து விளையாடியதும், கிலுகிலுப்பை மரத்தினுள் கள்ளன் பொலிசு விளையாட்டு விளையாடியதும் நினைவுக்கு வருகின்றன ..

எனது குடும்பத்தின் பஞ்சப்பட்ட வாழ்க்கை கற்றுத்தந்த சோறு கறி விளையாட்டு ..

சமூகம் கற்றுத் தந்த தேர் இழுக்கும் விளையாட்டு ..

சமுதாயத்தில் கண்டு கற்றுக்கொண்ட கள்ளன் பொலிஸ் விளையாட்டு...

முதலிரண்டும் தேவை கருதி மனதில் படிந்தவைகள். மூன்றாவது பயத்தினால் மனதில் படிந்தது...

குடும்பம் - சமூகம் - சமுதாயம்...! இளமைக்கால வளர்ச்சியின் எல்லைகள்... நான் எனக்குள் சிரித்துக் கொள்கிறேன்!

''புலிகளும் ஆமிக்காறரும் சுடுபடுகிற அடிபாட்டு விளையாட்டு விளையாடுவம் ..'' பாலா கூறுகிறான். பாலாவின் அபிப்பிராயம் பரிசிலனையின்றி ஏகமனதான அங்கிகாரத்தைப் பெற்று முடிவாக்கப் படுகின்றது .. எல்லோருக்கும் மிக மகிழ்ச்சி.

புலிகள்- ஆமி- அடிபாடு! எனது சிறுவயதுக்கால அனுபவங்களை எண்ணி எனக்குள் சிரித்துக் கொண்ட நான், இந்தச் சிறுவர்களின் முடிவைக் கண்டு எனக்குள் ஆச்சரியப் பட்டுக் கொள்கிறேன்.

எனக்கிப்போது ஐம்பது வயது இளமைக்கால மென்று பதினைந்துவயதுகளைக் கழித்துக் கொண்டாலும் முப்பத்தைந்து வருடங்களில் எவ்வளவு மாற்றங்கள்!

எனது கவனம் முழுவதும் அவர்களின் விளையாட்டில் தரிக்கின்றது

''அடிபாட்டு விளையாட்டெண்டால்... துவக்குகள், கிரனைட் குண்டுகள், வோக்கிரோக்கிகள் எல்லாம் செய்ய வேணும்...'' போராட்டத்திற்குத் தேவையான ஆயுத உபகரணங்களை ரமணன் எவ்வளவு சர்வசாதாரணமாக உச்சரிக்கின்றான். ரமணன் மட்டுமா உச்சரிக்கின்றான் .. இவர்களுக்குள் வயதில் மிகக் குறைந்த இவன் ராஜூ ... அவன் கூட ஆயுத உபகரணங்களை உச்சரிக்கின்றான்.

சிலவினாடிகள் கடுமையான சிந்தனையில் ஈடுபட்டிருந்த பாலா ஏதோ முடிவுக்கு வந்தவனாய் கிணற்றடியில் நிற்கும் பப்பாசி மரத்தை நோக்கி நடக்கின்றான். சில நிமிடங்களுக்கு முன்னர் பப்பாசி மரத்திலிருந்து விழுந்த நீண்ட தண்டோடு சேர்ந்த இலையை எடுத்து வருகின்றான் .. சில வினாடிகள் பப்பாசித் தண்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவன் .. மேற்பக்கத்திலுள்ள இலைப்பகுதியை முறித்து எறிகின்றான்.

அடிப்பக்கம் பருத்து நுனிப்பக்கம் குழல் வடிவில் .. ஒரு துப்பாக்கியைப் போன்ற இலேசான ஓர் அமைப்பு .. இருந்தாலும்... அவனின் மனம் திருப்திப்படவில்லை...

பாலாவின் சிந்தனை நீள்கிறது... பப்பாசித் தண்டை வைத்துத் திருப்பித் திருப்பி பார்க்கின்றான்.

நான் அவர்களின் நடவடிக்கைகளை மிகவும் அவதானமாக நோக்குகிறேன்...

''கண்ணா... ஒரு மச்சைசாக்கு எடுத்துக் கொண்டு வாடா...'' பாலாவின் உடன் பிறந்த சகோதரன் தான் கண்ணன். வீட்டில் என்றும் பாலாவுக்கும் கண்ணனுக்கும் போட்டியாகவே இருக்கும், ஆனால், இங்கு மட்டும் பாலா கூறியதும் எந்த மறுப்புமின்றி ஈர்க்கை எடுத்து வர ஓடுகிறான் கண்ணன்.

ஓடியவன் செவ்விழ நீர் மரத்தில் ஒரு ஓலையைப் பிடிங்கி, கிழித்து ஈர்க்கை மட்டும் கொண்டு வருகிறான்.

ஈர்க்கை அளவாக முறித்தெடுத்த பாலா பப்பாசித் தண்டின்அடிப்பாகத்திலிருந்து சிறிது மேலாக ஈர்க்கின் இரண்டுமுனைகளையும்வளைத்து அரைவட்ட வடிவில் குத்துகிறான்......

துப்பாக்கியை வெடிக்கவைக்கும் விசையை பாதுகாத்திருக்கும் இரும்பிலாலான அரை வட்டம் .. அந்த வடிவம்...

மிகுதி ஈர்க்கில் ஒருதுண்டை முறித்தெடுத்து அரை வட்ட வடிவத்தின் நடுவில் இறக்குகிறான்.

அது-துப்பாக்கியை வெடிக்க வைக்கும விசை! ..

துப்பாக்கிதான் !

ஆனால் பாலாவுக்கு இன்னும் பூரண திருப்தியில்லை...

''அண்ணா ... .. எனக்கொண்டு செய்துதாடா'' கண்ணன் மன ஆவலில் கேட்கிறான்.

''பொறடா வாறன்......'' பாலா எதையோ சிந்திக்கிறான்.

''கண்ணா... ஓடிப்போய்ஒரு வாழை நார் கிழிச்சுக் கொண்டு வாடா ..'' பாலா மீண்டும் கட்டளையிடுகிறான்.

கண்ணன் ஓடிப்போய் ஒரே நிமிடத்தில் வாழை நாருடன் திரும்பி வருகின்றான். வாழைநாரை வாங்கியபாலா நாரின் ஒரு முனையைத் தண்டின் அடிப்பாகத்திலும், மறுமுனையைத் தண்டின் நுனிப்பாகத்திலும் கட்டுகிறான் .. தோளில் போடுகிறான்.. துப்பாக்கி தோளில் தொங்குகின்றது... அவன் வழமையை விட நிமிர்ந்து நிற்கிறான் ..

ஒரு போராளி போல ..!

எனதுஉடலெல்லாம் ஏதோ ஒரு விறைப்பு...! எனது மனம் திரும்பவும் பின் நோக்கித் திரும்புகின்றது...

பஞ்சப்பட்ட சோறு கறி விளையாட்டு ... சிந்தனை நீளப்பார்க்கின்றது... நீளவிடாமல் தடுத்து நிறுத்தி முற்றுப் புள்ளி வைத்து...

இவர்களின் விளையாட்டை அவதானிக்க முயல்கிறேன்...

...சமைத்ததும்சாப்பிட்டதும் தானே மிச்சம்... வேறு எதை உருப்படியாகச் செய்தோம்...? எனது மனம் தன்னிச்சையாகத் திட்டுகின்றது! ஒருவாறு சிந்தனையை நிறுத்திக் கொண்டு விளையாட்டைஅவதானிக்கின்றேன்.

இப்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பப்பாசித் தண்டு தேவைப்படுகின்றது... ரமணன் வீட்டின் கோடிப்பக்கமாக ஓடிப்போய் முருங்கை மரத்தடியில் கிடந்த கொக்கைத் தடியைத் தூக்க முடியாமல் தூக்கி வருகிறான்... எல்லோரும் சேர்ந்து கொக்கைத் தடியை நிமிர்த்தி பப்பாசித் தண்டுகளைத் தட்டி விழுத்துகின்றனர்...

செவ்விளை மரத்தில் ஈர்க்குப் பிடுங்கப்படுகின்றது.

சில நிமிடங்களில் துப்பாக்கிகள் தயாராகிவிட்டன!

பாலாவைப் போல் தோள்களில் துப்பாக்கிகளைக் கொழுவிக்கொண்டுஎல்லோரும்நிமிர்ந்துநிற்கின்றனர்!

அடுத்து கிரனைட்குண்டு-

நீள்சதுரமான அந்த பனம் பாத்திக் கிடங்கை அண்மித்து பனங்கொட்டைகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த பனங்கொட்டைகளில் ஒன்றை எடுக்கின்றான் ரமணன். மண்ணுக்குள் கிடந்து உக்கி தும்புகள் நீங்கி - ஆமையின் ஓடுபோல் ஆகிவிட்ட பனங்கொட்டை.. அதைத் திருப்பித் திருப்பிப் பார்க்கின்றான்...

''எடை பாலா... இதைக் கிரனைட் எண்டு வெச்சிருப்பமா...?''

''ஓமடா...இதுதான் கிரனைட்...''

எல்லோரும் பனங்கொட்டைக் குவியலுக்குள் நல்ல சிறிய பனங்கொட்டைகளைத் தெரிந்தெடுத்து தங்கள் கலிசான் பைகளை நிரப்பிக் கொள்கின்றனர்.

அடுத்து- வோக்கிரோக்கி...? செந்தூரன் கிரனைட்டுக்காகத் தான் பொறுக்கி வைத்திருந்த பனங்கொட்டைத் துவாரத்தினுள் ஒரு நீண்ட தடியை எடுத்து இறுக்கி நிறுத்துகிறான்

''எடேய் இஞ்சாருங்கோடா வோக்கிரோக்கி...'' எவ்வளவு மகிழ்ச்சியோடு அவன் கூறுகிறான்.

பனங்கொட்டை - வோக்கிரோக்கிப் பெட்டி, தடி அதன் ஏரியல்!

''எடேய்! பெரிய பனங்கொட்டையாய் எடுங்கோ... அப்பதான் வடிவாய் இருக்கும்.'' ரமணன் சிறு திருத்தம் கூறுகின்றான்.

பப்பாசித்தண்டு - துப்பாக்கி

சிறிய பனங்கொட்டை - கிரனைட்.

பெரிய பனங்கொட்டை - வோக்கிரோக்கி!

ஆயுதங்கள் தயாராகி விட்டன!

இவர்கள் விளையாட்டைத் தொடங்க மாட்டார்களா என்ற ஆவலுணர்வு எனது மனத்தை அரிக்கின்றது. 'பொடியள் விளையாட்டைத் துவங்குங்கோடா' இப்படிக் கூற நினைக்கிறேன்... அவ்வளவு மனவேகம் அப்படி கூறினால் அவர்கள் வெட்கப்பட்டு விளையாட்டை நிறுத்திக் கொண்டு விட்டால் .. அதை நினைத்து மௌனமாக இருந்து அவதானிக்கின்றேன்.

''பாலை கன்னை புறிப்பமா?'' ரமணன் இப்படிக் கேட்டதும் எல்லோரும் அரை வட்ட வடிவில் அவனுக்குமுன்னால் நிற்கின்றனர்.

''இந்தக் கிடங்குதானாம் 'ஆமிக் காம்ப்' இதுக்குள்ளை ஆமிக்காறர் துவக்கோடை இருப்பினமாம்... புலிகள் மெல்ல மெல்லமாய் வந்து சுடுவினமாம். ஆமிக்காரர் ஆயுதங்களைப் போட்டிட்டுப் பயந்தோடுவினமாம். புலிகள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு காம்பையும் உடைச்சுப் போட்டுப் போவினமாம்...'' ரமணன் விளையாட்டை விளக்குகிறான்.

''கன்னை புறிப்பம்... நானும், கண்ணனும் புலிகள். பாலாவும், செந்தூரனும், மயூரனும், ராஜூவும் ஆமிக்காரர்... ஆமிக்காரர் கனக்கவாய் இருக்கிறவங்கள். புலிகள் கொஞ்சமாய்த் தானே போறவங்கள்... அதுதான் நானும், கண்ணனும் மட்டும் புலிகள். நீங்களெல்லாம் ஆமிக்காரர்.''

கன்னை பிரிக்கப்பட்டு விட்டது.

அடுத்து விளையாட்டு! அடிபாடு!

எனது உணர்வின் உச்ச நிலை! அவர்களின் நடிப்பைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## போஃபர்ஸ் பீரங்கி ஊழல்

# ராஜீவ் இத்தாலிய நண்பருக்கும் தொடர்பு; அம்பலமாகும் இரகசியங்கள்

போஃபர்ஸ் ஊழலில் பணம் பெற்றவர்கள் யார், யார்? கிட்டத்தட்ட பதில கிடைத்துவிட்டது!

★ ராஜீவ் காந்தியின் குடும்ப நண்பரான ஒட்டாவியோ கட்ரோச்சி.
★ ஸ்ரீசந்த் இந்துஜா.
★ கோபிசந்த் இந்துஜா.
★ பிரகாஷ் இந்துஜா.
★ இந்துஜாக்களின் கம்பெனியான 'ஜ-பிலிபை னாஸ்'.
★ வின்சத்தா.
வின் சத்தாவின் கம்பனியான 'ஸ்வென்ஸ்கா'.

இவர்கள்தான் பணம் பெற்றார்கள் என்பது கடந்த வாரம் வெளியாகியுள்ளது.

எப்படி?

கொஞ்சம் முன்கதைச் சுருக்கம்.

ஸ்வீடன் நாட்டில் உள்ள போஃபர்ஸ் கம்பெனி இந்திய ராணுவத்துக்கு 1500 கோடி ரூபாய் அளவுக்குப் பீரங்கிகளை 1986-ம ஆண்டில் விற்பனை செய்தது. இதற்காக அந்தக் கம்பனி பலருக்கு 300 கோடி ரூபாய் லஞ்சமாகக் கொடுத்தது என்ற செய்தி பிறகு வெளியானது.

அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி இது பற்றி விசாரிக்க நாடாளுமன்றக்குழு ஒன்றை சங்கரானந் தலைமையில் அமைத்தார்.

விசாரணைநடத்திய நாடாளுமன்ற குழு "ஊழல் எதுவும் நடக்கவில்லை" என்று அறிவித்தது. ஆனால். ஊழல் நடந்ததற்கான ஆதாரங்களைப் பத்திரிகைகள் அடுத்தடுத்து வெளியிட்டன.

இந்தச் சூழ்நிலையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோற்றது தேசிய முன்னணி வென்றது. வி. பி. சிங் பிரதமரானார். அதன் பிறகுதான் ஊழல் தொடர்பான புலனாய்வில் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கோர்ட்டில் முதல் முறையாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை (FIR) அளிக்கப்பட்டது. இந்த ஊழல் தொடர்பாக ஸ்விஸ் நாட்டு வங்கிகளில் இருந்த இரகசியக் கணக்குகளை இந்திய அரசின் வேண்டுகோளின்படி ஸ்விஸ் அரசு முடக்கியது.

இந்தக் கணக்குகளைத் தொடர்ந்து முடக்கிவைக்குமாறும், அவை யாருடைய கணக்குகள் என்பது உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களையும் ஆவணங்களையும் அளிக்குமாறும் புலனாய்வில் ஒத்துழைப்புத் தருமாறும் ஸ்விஸ் அரசைக கோரி இந்திய கோர்ட் மூலம் இந்திய அரசு கோரிக்கை அனுப்பியது.

இந்தக்கோரிக்கையைஸ்விஸ் அரசு ஏற்கலாம் என்று அந்த நாட்டின் ப்ராஸிக்யூஷன் மாஜிஸ்ரேட் 1990-ம்ஆண்டிலே தீர்ப்பளித்துவிட்டார்,

ஆனால் .

உடனே அந்தக் தீர்ப்பை எதிர்த்து ஸ்விஸ் நாட்டின் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது!

வழக்குத் தொடர்ந்தவர்கள் யார், யார்?

அந்த வழக்குக்கு எதிராக கோர்ட் தீர்ப்பளித்தால் தவிர வழக்குத் தொடர்ந்தவர்கள் யார் என்ற விபரத்தை கோர்ட் வெளியிடாது.

ரகசியமாகவே வைத்திருக்கும்!

இது அந்தநாட்டின்சட்டம்!

இதன்படி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இது பற்றி இந்த நாட்டு சுப்ரீம் கோர்ட் விசாரணை நடத்தி வந்தது.

முன் கதைச் சுருக்கம் இத்துடன் முடிகிறது! இனி இப்போதைய கதையைப் பார்க்கலாம்!

ஸ்விஸ் நாட்டு சுப்ரீம் கோர்ட் கடந்த வாரம் தீர்ப்பளித்தது. இந்திய அரசின் கோரிக்கையை ஸ்விஸ் அரசு ஏற்று முழு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று தீர்ப்பளித்துவிட்டது!

இந்திய அரசின் கோரிக்கையை ஏற்கக் கூடாது என்று கோரி வழக்குத் தொடர்ந்தவர்கள் யார், யார் என்ற விவரத்தையும் கோர்ட் வெளியிட்டது! வழக்குத் தொடர்ந்தவர்கள். இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட 7 பேர் தான்! அதாவது தொழில் அதிபர்கள் 5பேரும், இரண்டு கம்பெனிகளும்! இவர்கள் வழக்குத் தொடர்ந்தவர்கள் தானே! அதனாலேயே அவர்கள் பணம் பெற்றவர்கள் என்று ஆகிவிடுமா என்ன?

பணம் பெற்று ரகசியக் கணக்கு வைத்திருப்பவர்கள் மட்டும்தான் இத்தகைய வழக்கைத் தொடர முடியும். நேரடியாகச் சம்பந்தம் இல்லாத மூன்றாவது நபர் தொடர முடியாது என்பதும் அந்த நாட்டுச் சட்டமாகும்! எனவே, போஃபர்ஸ் கம்பெனியிடம் பணம் பெற்று. அந்தப் பணத்தை ஸ்விஸ் வங்கியில் ரகசியமாகப் போட்டுக் கணக்கு வைத்திருந்தவர்கள். இந்த 7 பேர்தான் என்பது தெளிவாகிவிட்டது! இதில் குறிப்பிடப்பட்ட தொழில் அதிபர்கள் 5 பேரில் 4 பேர் "போஃபர்ஸ் பீரங்கி பேரத்தில் நாங்கள் சம்பந்தப்பட்டது உண்மைதான். ஆனால், சட்டவிரோதமாக எதுவும் செய்யவில்லை" என்றே கூறிவருகிறார்கள்! ஆனால், ஐந்தாவது நபரான ஒட்டாவியோ கட்ரோச்சி என்பவரோ, இதில் தனக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றுதான் இதுவரை கூறிவந்தார்!

பிறகு. ஏன் அவர் வழக்குத் தொடர வேண்டும்?

இதுதான் மில்லியன் டாலர் கேள்வி!

கட்ரோச்சி இத்தாலி நாட்டுக்காரர். இத்தாலி கம்பெனி ஒன்றின் பிரதிநிதியாக இந்தியாவில் பணியாற்றி வருகிறார். அவர் ராஜீவ் காந்திக்கும், அவரது மனைவியும் இத்தலிய வம்சாவளியைச் சேர்ந்தவருமான சோனியா காந்திக்கும் நண்பர்.

மேலும் போஃபர்ஸ் கம்பெனியின் முன்னாள் சேர்மன் ஆர்ட்போ, தனது டைரிக் குறிப்பில் "Q மூலம் R ஐத் தொடர்பு கொண்டதாக எழுதியிருப்பது ஏற்கனவே வெளியாகியுள்ளது.

Q என்பது கட்ரோச்சியின் (Quattrocchi) முதலெழுத்து!

R என்பது ராஜீவின் (Rajiv) முதலெழுத்து...!

என்றெல்லாம் யூகங்கள்!

எது எப்படியோ! போஃபர்ஸ் ஊழல் புலனாய்வில் கிட்டத்தட்ட கடைசித்தடைக் கல்லும் நீக்கப்பட்டுவிட்டது!

இனிமேல் இது தொடர்பான குற்றவாளிகள் அனைவரையும் மிகவிரைவில் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்கான பாதைதிறந்து விடப்பட்டிருக்கிறது.

ஆனால், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது சந்தேகமாகவே நீடிக்கிறது.

ஏனெனில் —

"போஃபர்ஸ் விவகாரப்புலனாய்வைத் தொடர்ந்து நடத்துவது என்பது ராஜீவ் காந்தியின் நினைவுக்குச் செய்யும் அவமானம் ஆகும்" என்று ப. சிதம்பரம் முன்பு கூறியிருக்கிறார்!

போஃபர்ஸ் புலனாய்வில் என்ன இருக்கிறது! ஒன்றுமே இல்லை! புலனாய்வை ரத்து செய்ய வேண்டும்! என்று காங்கிரஸ் கட்சியின் பத்திரிகைத் தொடர்பாளர் சந்துலால் சந்திரகார் முன்பு கூறியிருந்தார்!

இப்போது - யூலை மாத இறுதி வாரத்தில் 7 பேர் விவரம் வெளியான உடனே காங்கிரஸ் மேலிடக்குழு தீர்மானமே நிறைவேற்றிவிட்டது. "எங்கள் அன்புத் தலைவர் மறைந்த ராஜீவ் காந்தியின் கௌரவத்தைக குலைக்கும் செயலை அனுமதிக்கமாட்டோம்.

சென்ற ஒகஸ்ட் இரண்டாம் திகதி முதல் மூன்று நாள்கள் நடந்த நம்பிக்கையில்லாத்தீர்மான விவாதத்தின் போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருமே "போஃபர்ஸ் விவகாரத்தில் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

ஆனால், விவாதத்துக்குப் பதில் அளித்து ஒரு மணிநேரம் பேசிய பிரதமர் நரசிம்மராவ் இதுபற்றி ஒரு வார்த்தை கூடப்பேசவில்லை!

எனவே சந்தேகம் நீடிக்கிறது!

சந்தேகத்தைப் போக்கி நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமை...

கடமை.

நிறைவேற்றப்படுமா?

நன்றி
ஜூனியர் போஸ்ட்

---


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால்
நடாத்தப்படும்

**ஒன்பது மாத கால**
**விவசாய பயிற்சிநெறி 1993/94**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயத்துறையில் ஒன்பது மாத காலப் பயிற்சி நெறி அளிப்பதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:- [1] விண்ணப்பதாரர் க. பொ. த [சா/த] பரீட்சையில் விஞ்ஞானம் கணிதம் உட்பட ஆறு பாடங்களில்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
[2] க பொ. த [உ/த] பரீட்சையில் இரசாயனவியல், தாவரவியல்பாடங்களில் சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 16. 09. 93**

அனுப்பவேண்டிய முகவரி:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

★ விண்ணப்பப் படிவங்கள் கீழ்வரும் மாதிரிப்படிவ முறையில் தயாரித்து அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ் கல்விச்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும.

குறிப்பு:- [1] மேற்படி பயிற்சி நெறியை கற்று முடிப்பதற்கான செலவுகளும் உணவும் இலவசம்.
[2] விண்ணப்பதாரிகள் அனைவரும் எதிர்வரும் 17-09-93 காலை 9 00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளித்தல் வேண்டும். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

[சி/7371]

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. முழுப்பெயர் : ..............................
2. நிரந்தர முகவரி : ..............................
..............................
3. தற்போதைய முகவரி : ..............................
..............................
4. பிறந்த திகதி : ..............................
வயது : ..............................
5. கல்வித்தகைமை : ..............................
..............................
6. விவசாய அனுபவங்கள் : ..............................
7. தந்தையின் முழுப்பெயர் : ..............................
,, முகவரி : ..............................
,, தொழில் : ..............................
8. குடும்பமாத வருமானம் : ..............................
9. வேறு தகைமைகள்: ..............................

மேற்கூறிய தகவல்கள் யாவும் சரியானவையெனவும், உண்மையானவையெனவும், பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து பயிற்சி முடியும்வரை தொடர்ந்து பங்குபற்றுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

திகதி : .............................. ..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

# உணவில் சுகாதாரம் பேணுதல் சமீபத்திய நடவடிக்கைகள்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். இரத்தினசபாபதி தலைமையில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. (சுகாதார மாநாடு என்றும் கூறலாம்). சமீபத்தில் நடந்த இந்த மாநாட்டில், தொற்று நோய் தடுப்பு நிபுணர் டாக்டர் கே. ரி. சிவபாதம், உணவு மற்றும் மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரி ரி. மகாதேவன், உயர் அதிகாரிகள் மற்றும் அந்தந்தப்பகுதிச் சுகாதாரப்பொறுப்பாளர்கள் என ஆகமொத்தம் 33 பேர் கலந்துகொண்டார்கள். அநேகமாக இக்கூட்டத்தில் பிரதேச சபை விசேட ஆணையாளர்களின் தலைக் கறுப்பைக்காணவில்லை. என்றாலும் அவர்களுக்கு அடுத்த வரிசையில் உள்ள ஒரு சில அதிகாரிகள் பிரசன்னமாயிருந்தார்கள் தலைவலிக்கின்றபோது, தலையா வலிக்கிறது என்று கேட்பது போல சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு, பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன சுகாதாரப் பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்கவே இந்தத் தீர்மானங்களாம்.

இந்தக் கலந்துரையாடலில் பிள்ளையார்சுழி போட்ட பிரதேச உள்ளூர் ஆட்சி ஆணையாளர் திரு. டிவகலாலா, தற்போதுள்ள சூழ்நிலையில் சுகாதாரம் பேணப்பட வேண்டிய அவசியத்தை விளக்கியதோடு, இறைச்சிக் கடைகள், கொல்களங்கள் போன்றவற்றில் சுகாதாரம் ஏற்ற முறையில் பேணப்படாததால் மக்களுக்கு ஏற்படும் தீங்குகளை எடுத்துக் கூறி, இவற்றைத் தடுப்பதற்கு இவற்றோடு சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைத்து இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாணப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

பிரச்சினைகளைத் தீர்க்கும் கட்டாயத்தில் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றிய சில தகவல்கள் வெளியானதும், வயிறு ப்பாளர் ஊமையாகிவிடவில்லை. வாசற்படிக்கு வெள்ளம் வந்த பிறகுதான் சம்பந்தப்பட்டவர்கள் இந்தத் திட்டங்களில் இறங்கியுள்ளார்கள் என்று சமூக சுகாதாரம் பேணுவதில் கரிசனை உள்ளவர்கள் பேசிக்கொள்கிறார்கள். இத்தீர்மானங்கள் சுகாதார விதிகளுடன் இசைவாகவே உள்ளன. முன்னிருந்த சுகாதார விதிகளை ஒட்டியே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

கலந்துரையாடலில் இறைச்சிக்கடைகளிலிருந்து ஆரம்பித்து பேக்கரிவரை முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. சுகாதாரத்தைப் பேண வேண்டியவர்கள் (சுகாதார உத்தியோகத்தர்கள்) சந்தர்ப்பவசத்தால் சில நல்ல காரியங்களை அலட்சியப்படுத்தியதையும் பல தளங்களிலுமுள்ள அக்கறையின்மையை மீள வலியுறுத்துவதாகவும் தீர்மானங்கள் அமைந்துள்ளன. அத்துடன் ஒரு ஆறேழு ஆண்டுகள் குடாநாட்டில் சுகாதாரம் சரியாகப்பேணப்படவில்லை என்பது இத்தீர்மானங்களில் இருந்து தெரிகிறது.

## பிரச்சினைக்குரிய தீர்வுகள்

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் சிலவற்றைப் பார்க்கலாம். குடாநாட்டில் பல இடங்களில் கொல்களங்கள், தொழுவங்கள் இல்லாமல் இறைச்சி வியாபாரம் நடப்பதாகக் கலந்துரையாடலில் தகவல் தரப்பட்டது. எந்தவித விதிமுறைகளையும் பின்பற்றாமல் வியாபாரத்துக்காக கால்நடைகளை வெட்டுவதுதான் யாழ்குடாநாட்டில் இப்போதுள்ள வழிமுறை. ஆதாயத்துக்காகவே 'எல்லாம்' நடைபெறுகிறது. யாழ்மாநகர சபை எல்லைக்குள் தொழுவமும், கொல்களமும் இராணுவ நடவடிக்கை காரணமாகச் செயற்படவில்லை. புதுஇடத்தைத் தெரிவுசெய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இத்தீர்மானம் தொடர்பாக முடிவெடுக்கக் கூடிய தரத்தில் உள்ள யாழ் மாநகரசபை அதிகாரிகள் எவரும் இந்த 'உச்ச' மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பது விசனத்துக்குரியது.

இந்த விஷயத்தில் மாநகர சபை அதன் ஒழுங்கு விதிகளுக்கு அமையத் தானாகவே நிர்ணயித்துக் கொண்ட அளவுகோல்களுடன் செயல்படலாம் என்ற நினைப்புடன் யாழ். மாநகர சபை உயர் அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லைப் போலும்.

வலிகாமம் தென் மேற்கில் ஒரு மாதகாலத்துக்குள் கொல்களம் அமைக்க வேண்டும் அல்லது இறைச்சிக் கடைகள் இழுத்து மூடப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைப்பிரிவில் அச்சுவேலி, கோப்பாயில் இயங்குகின்ற கொல்களங்களுக்கு அருகாமையில் தொழுவங்கள் இல்லையாம். இப்படிப் பல இடங்களிலும் பல குறைபாடுகள் சந்தேகத்துக்கிடமில்லாமல் தெரிகின்றன. வடமராட்சி தென்மேற்கு, வல்வெட்டித்துறை நகர சபை, வலி தெற்கு பிரதேச சபை, வலி வடக்குப் பிரதேச சபை, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி ஆகிய பகுதிகளிலும் ஏனோதானோ என்ற நிலை. ஒன்றிருந்தால் ஒன்றில்லை. தொழுவம் இருந்தால் கொல்களம் இல்லை; கொல்களம் இருந்தால் தொழுவம் இல்லை. எல்லாம் ஒரே கூடைச் செங்கற்கள்! கூட்டங்கள் கூடித் தீர்மானங்கள் போட்டாலும் இந்த அசாத்தியங்கள் எப்போது சாத்தியமாகும் என்பது (?) கேள்விக்குறி.

வேறுசில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. ஆதாயத்துக்காகத் தான் இறைச்சி வியாபாரம் என்றாலும், சுகாதாரத்தைப் பேணிக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட இத்தீர்மானங்களில் சிலவருமாறு:

—01. வெளி மாவட்டத்திலிருந்து கொண்டுவரப்படும் கால்நடைகள் அவ்வம் மாவட்டக் கால்நடை வைத்தியரின் சான்றிதழ் அடிப்படையிலேயே கொண்டுவருதல் வேண்டும். கொண்டு வரப்படும் கால் நடைகள் அல்லிப்பளையில் உள்ள தொற்று நோய்க் கட்டுப்பாட்டு நிலையத்தில் 3 நாட்கள் தடுத்து வைக்கப்படும். அக்கால்நடைகளில் இறைச்சிக்கு உகந்தது என்று கருதப்படும் கால் நடைகளுக்கு கால் நடைவைத்தியர் சிபார்சு வழங்கவேண்டும்.

—03. இறைச்சிக்காக வெட்டப்படும் கால் நடைகள் குறைந்தது 24 மணித்தியாலங்கள் உள்ளூராட்சி மன்றத் தொழுவத்தில் கட்டாயமாகக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

—03 தொழுவத்தில் கட்டப்பட்டிருக்கும் பெண்ணினக் கால்நடைகளைப் பார்வையிட்டு, அவை இறைச்சிக்காக வெட்டப்படலாமா, இல்லையா என்பதினைக் கால்நடை வைத்தியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

—04 24 மணித்தியாலங்கள் தொழுவத்தில் கட்டப்பட்ட கால்நடைகளைப் பொதுச் சுகாதார அதிகாரிகள் பார்வையிட்டு அனுமதித்த பிறகே கொல்களத்துக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும்.

—05 உள்ளூராட்சி மன்றங்களால் அனுமதிக்கப்பட்ட இறைச்சிக் கடைகளில் மட்டுமே இறைச்சி விற்பனைக்காக அனுமதிக்கப்படல் வேண்டும்.

—06 முத்திரையிடப்படாத இறைச்சிகளை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை.

—07 சில சமயங்களில்பழைய இறைச்சி விற்கப்படுவதால் சுகாதார பரிசோதகர்கள் கொல்களங்களை மாத்திரமன்றி இறைச்சிக் கடைகளையும் பார்வையிட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இத்திட்டம் செயற்படுத்த கால் நடை வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான உத்தியோகத்தர்களுக்கு இரண்டு மாதப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. இரண்டு மாதப் பயிற்சியின் செயற்பாடு ஏதாவது தவறுகளுக்கு இட்டுச் செல்லக் கூடாது என்பது தான் வயிறுப்பாளர் கவலை.

## தேநீர்ச் சாலைகள், பேக்கரிகள்

அடுத்தது. இப் பிரதேசத்திலுள்ள உணவகங்கள், தேநீர்ச் சாலைகள், பேக்கரிகள் ஆகியன நகரசபை மற்றும் பிரதேச சபை உப - விதிகளுக்கு அப்பால் செயற்படுவதாகக் குறை தெரிவிக்கப்பட்டது. மேற்படி வியாபார நிலைய உரிமையாளர்களின் அசட்டுத்தனங்களை கெட்டிக்காரத்தனமாகக் கையாளும் வகையில் 15 அறிவுரைகள் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளரால் உணவகங்கள், தேநீர்க் கடைகள் மற்றும் பேக்கரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தல் கடிதம் கிடைத்து 14 நாள்களுக்குள் செய்து முடிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது. சாதாரண சுகாதாரம் பேணும் அறிவுறுத்தல்களை அமுல் படுத்தத் தவறும் பட்சத்தில் இவ்வாண்டிற்கான வியாபார உத்தரவு ரத்துச் செய்யப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளரின் சில அறிவுறுத்தல்களை அப்படியே செயற்படுத்த முடியாது என்று சில உரிமையாளர்கள் ஆதங்கம் தெரிவிக்கிறார்கள். ''சுகாதாரத்தைப் பேணித்தான் நாம் பொருளீட்ட வேண்டும். அறிவுறுத்தலில் சொல்லியுள்ளபடி மர வேலைகளுக்கு மை பூசவும், சமையல் அறையின் நிலத்துக்கு சிமெந்து போடவும் நாம் எங்கே போவது? சிமெந்தைக் கண்ணால் கூட பார்க்கமுடியவில்லை'' என்று அங்கலாய்க்கிறார் ஓர் உணவக உரிமையாளர். எதுஎப்படியிருந்தாலும், செயல்பாடு மிகுந்த இத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டால் மக்களுக்குத்தான் நன்மை.

சுகாதாரமற்ற முறையில் இயங்கும் தேநீர்ச் சாலைகள், பேக்கரிகள் பற்றி அவ்வப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரிகள், அவ்வப் பகுதிப் பிரதேச சபைகளுடன் தொடர்பு கொண்டு இவை சம்பந்தமான சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தத் திட்டங்களை அப்படியே ஏற்றுக் கொண்டு செயற்படுத்தினால் எல்லாம் நல்லபடி நடக்கும். இத்திட்டங்களோடு ஒட்டிய மாதிரியும், மேலெழுந்த வாரியாகவும் செயல்படுத்தினால் சுகாதாரம் வேறு 'தினுசாகத்' தோற்றலாம்.

கடைசியாக, இலைகளை எண்ணிய வேகத்தில் மரங்களை எண்ணத் தவறியது போல் யாழ் மாநகர சபைக்குள் சுகாதாரம்பேணப்படுவது குறித்து எவரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தக் கலந்துரையாடலில் இது கவனிக்கப்படவில்லை என்றால், பூனைக்குமணி கட்டுவது யார்?


> உணவில் சுகாதாரத்தைப் பேணும் நோக்குடன் சமீபத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கூடிய கருத்தரங்கில் பல முடிவுகள் மிகவும் விஸ்தாரமாக எடுக்கப்பட்டன. சில முடிவுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுகாதாரச் சீர்கேட்டை தீர்மானமாகச் சுட்டிக் காட்டுகின்றன.
>
> — மதன் -


## கருவாடு

கொடுவா, கட்டா, விளை, இறால் போன்ற தரமிகு கருவாடு வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் உங்கள் கடல்வள உற்பத்திகளை சந்தைப்படுத்தவும், நம்பிக்கையுடன் நாடுங்கள்:

**நீர் நிதி**
ஐந்து சந்தி,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7392)


## 31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



**சுதிரவேலு கருணாநிதி**

(கலைமகள் வீதி மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறை)

மண்ணுலகம் 25-12-1961 — விண்ணுலகம் 12-8-1993

இவ் உலகில் எம்வாழ்வை
உயரவைத்த எங்கள் தெய்வமே
உங்கள் செல்லச்சிரிப்பும் இன்டல் பேச்சும்
கண்களிற்குள் கனவாகி
கண்ணீராய் வழிகிறது
சாவு எல்லோரும் சந்திக்க வேண்டியதுதான்
ஆனால் உங்கள் சாவு............
நினைக்கும் தோறும் எம் நெஞ்சம்
நெருப்பாய் எரிகிறது
நாட்களின் நகர்வில் நாங்களும்
உங்களோடு சேரும் நாட்களுக்காய்
கண்ணீரில் கரைந்து காத்திருக்கிறோம்.

11-9-93 நாளை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோவிலடி, உடுவில், சுன்னாகம்.

மனைவி: (ரஜனி)
சின்னமாமா குடும்பத்தினர் (மட்டுவில்)

[5902]

யாழ்ப்பாணம்



## குருத்துக்கள்

பார்க்க வேண்டுமென்று ஆவல்!...

புலியாய் நடிக்கத் தெரிவு செய்யப்பட கண்ணன் மகிழ்ச்சியோடு ரமணனுக்கருகே வந்து நிற்கின்றான்.

ஏனைய நால்வரும்...மனம் சோர்ந்துபோய் நிற்கின்றனர். பாலா தனது களிசான் பைக்குள் கிரனைட்டாக வைத்திருந்த பனங்கொட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்து நிலத்தில் போடுகின்றான்.. அவனுக்கேற்பட்ட வெறுப்புணர்வின் வெளிப்பாடு!

ரமணனால் பாலாவைப்புரிந்து கொள்ள முடியவில்லை. ரமணனால் மட்டுமா?... ஐம்பது வயதுக்காரனான என்னாலும்தான் புரிந்துகொள்ள முடியவில்லை!

''பாலா விளையாடுவமா...''?

''நான் விளையாட வெரயில்லை...'' பாலா கூறுகிறான்.

''நானும் விளையாட வெரயில்லை...'' செந்தூரன் கூறுகிறன்.

''நாங்களும் விளையாட வெரயில்லை...'' மயூரனும், ராஜுவும் கூறுகின்றனர்.

ரமணனும், கண்ணனும் ஆளையாள் பார்த்துக் கொள்கின்றனர். அந்த நால்வரின் மனமாற்றங்களுக்கான காரணங்களை அவர்களால் புரிந்து சொள்ள முடியவில்லை!

பெரும் ஆவலோடு ஆயுதங்களைச் செய்து கொண்ட அவர்கள் இப்போது விளையாட பின்வாங்குகின்றனர்!

என்ன காரணம்...?

பாலாவைப்போல் மற்றைய மூவரும் ஆயுதங்களை நிலத்தில் போடுகின்றனர்...

''பலா.. டேய்.. வாடா விளையாடுவம்'' காரணம் புரியாத ரமணன் பாலாவிடம் கெஞ்சுகிறான்

''நான் மாட்டன்...''

''ஏன் ... ...''

''விளையாட எனக்கு விருப்பம் ... ... ஆனால் ... ...ஆமிக்காரனாய் வர விருப்பமில்லை'' பாலா கூறுகிறான்.

பாலா மனம் சோர்ந்து போனது புரியாத புதிராக இருந்தது ... இப்போது அவன் கூறிய காரணம், அதைவிடப் புதிராக இருக்கின்றது!

விளையாட விருப்பம் ... ... ஆனால் ஆமிக்காறனாய் வர விருப்பமில்லை. ... இதில் என்ன வித்தியாசத்தை இவன் கண்டு விட்டான் ... ...

சிறிவயதில் நாங்கள் கள்ளன் பொலிசு விளையாட்டு விளையாடுவோம்... ... இதில் நான் பொலிசுக்காரனாய்த் தான் வரவிரும்புவேன் ஏனென்றால் அதிகாரமுள்ள பாத்திரம் ... ...

இவன் பாலா ... ஆமிக்காரனாய் வர மறுக்கின்றான்!

''எடை ... பாலா வாடா விளையாடுவம் ...''

''எனக்கு ஆமிக்காரனாய் வர விருப்பமில்லை...''

''ஏன்?''

''ஆமிக்காரனாய் வந்தால் ... ... ஆயுதங்களைப் போட்டிட்டு பயந்தோட வேணும் ... ...''

''விளையாட்டுத்தானே...''

''விளையாட்டுக் கெண்டாலும் ... ... பயந்தோட விருப்பமில்லை... ... அப்பிடியெண்டால் ... நீயும் கண்ணனும் ஆமிக்காரனாய் வாருங்கோ... நாங்கள் புலிகளாய் வாறம் ..' பாலா கூறிவிட்டு ரமணனைப் பார்க்கிறான்.

ரமணனும், கண்ணனும் தலையைக் குனிந்து நிற்கின்றனர் ... ... அவர்களுக்கும் ஆமிக்காரனாய் வர விருப்பமில்லை ... ...

''எங்களுக்கும் புலிகளாய் வரத்தான்விருப்பம்... ...ஆமிக்காறனாய் வந்தால்...... ஆயுதங்களை எறியவேணும், பயந்தோடவேணும் ... ...சூடு வாங்கவேணும ... ... அடி வாங்கவேணும் ...'' ரமணன் தலையைக் குனிந்தபடி நின்று கூறுகின்றான்.

எல்லோரும் புலிகளாகி நிற்கின்றனர் ... ...

எல்லோரும் ஒரே கன்னை!

.... ... எனது உடலில் புதியதொரு நரம்பு பிரசவித்து உடலெல்லாம் பிரவாகிக்கின்ற உணர்வெனக்கு .. ... முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு ... நான் 'சமையல்' விளையாட்டு விளையாடினேன் ... இன்று ... இவர்கள் 'அடிபாட்டு' விளையாட்டை விளையாடுகின்றனர் ...

எவ்வளவு மாற்றம் .......?

அதிலும் -

விளையாட்டுக்குக்கூடஅவர்கள் பயந்தோட விரும்பவில்லை ... அடிக்கத்தவிரும்புகிறார்கள் ... ...

இதுதான் மிகப்பெரிய மாற்றம்!

''மாவீரர்கள் புதைக்கப்படுவதில்லை .. ... அவர்கள் விதைக்கப்படுகின்றார்கள்...'' என்று கூறுகின்றார்களே ......அந்தமாவீரர்கள் விதைக்கப்பட்ட நிலத்தில், மண்ணைக் குடைந்தெழுந்த குருத்துக்களா இவர்கள்!

பெரும் ஆயுதங்களோடு முகிழ்ப்பெடுத்த விளையாட்டு .... குழப்பத்தில் முடிகின்றது!

முடியாத இந்த விளையாட்டிலும் -

முடிவானதொருமுடிவுண்டு!

விபரிக்க முடியாத பல உணர்வுகள் எனது இதயத்துள் சங்கமமாகிக் கொண்டிருக்கின்றன!

(யாவும் கற்பனையல்ல)

## இசுரவேல்

கையாண்டு இசுரவேலை அழிப்போம் என்றவர்கள் 1970 செப்டெம்பரில் அமைப்பை தோற்றுவித்து 1972 செப்டெம்பரில் மியுனிச் ஒலிம்பிக் போட்டியில் புகுந்து யூத போட்டியாளரை பணயம் வைத்து உலகை அதிரச் செய்தவர்கள்.எல்லாம் இன்றுகடும் தலைமைப் போட்டி சிந்தாந்தப் போட்டியால் தமக்குள் மோதி மடியும் நிலையும் இன்று அரங்கேறி விட்டது. அதேபோல சகல அரபு நாடுகளும் பாலத்தீனத்திற்கு ஆதரவு என்கிற போர்வையில் பாலத்தீனிய தலைமையை சின்னா பின்னமாக்கியதும் வரலாற்றுத்தன்மை. இவ்வாறாக இன்று புதிய தொரு போராட்ட அலையில் புதிய தலைமுறை ஆயுதப் போராட்டத்தை தொடர முனையும் போது பாலத்தீனிய மக்களின் முன்வைக்கப்பட்ட உடன்பாட்டுத்திட்டம் இவ்வளவு தானா என்கிற கேள்வி எழுவதைத்தவிர்க்கமுடியவில்லை என்றாலும் 45 ஆண்டிற்கு மேலாக அல்லற்படும் மக்கட்கு அமைதி கிட்டும் வகையில் இவ் உடன்பாடு முடிவாக இராமல் தொடக்கமாகட்டும் என நாம் வேண்டும் அதேசமயத்தில் போராடும் தன்மையை இழந்து மாற்றான் நல்லெண்ணத்தை மட்டும் நம்பி போராட விரும்புவோரை மழுங்கடிக்கப் பயன்படப்போகும் உடன்பாடு உருவாகப் போகும் விளைவுகள் விபரீதமாக அமையும் அபாயம் கூடவேயிருப்பதை நாம் சுட்டாமல் இருக்க முடியாது. எனவே சொந்தக் காலில் சொந்த தாயகத்தில் போராடுவோரே இலக்குகளை அடைவர் என்பதை நாம் சொல்லாமல் இருக்க முடியாது.


# விக்னா

## கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L வகுப்புக்களுக்கு தனித்துவம வாய்ந்த ஒரே நிறுவனம்

93 O/L சனி, ஞாயிறு, பகல், மாலை நேர வகுப்புகளுக்கான

PAPER CLASS

(வினா-விடை வகுப்புக்கள்)

திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R சூரி |
| கணிதம் | — திரு. ஜெகன் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | திரு. கோபி |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | — திரு. சிவா, திருபபதி |
| வர்த்தகம் | — திரு. கருணாகரன் |
| இந்துசமயம் | — திரு. கெங்கா, சங்கர் |

ஆரம்பம்: 11-09-1993

சனி காலை 9 மணி

∴ ஆண்டு - 9, 10, 11 பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக மீட்கப்படும்.

∴ விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி-6039)



# தேவை

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் எமது தலைமைச் செயலகத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

கல்வித்தகைமை:- ஆகக்குறைந்தது 8ஆம் வகுப்பு

அல்லது

அனுபவம் ஆகக்குறைந்தது 2 வருடங்கள்.

வயது:- 35 முதல் 55 வரை.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

சிபார்சு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் நற்சான்றிதழ்களுடனும், சொந்தகையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் செப்டெம்பர் மாதம் 14ந் திகதி(14-09-93) காலை 10மணியிலிருந்து 1.00மணி வரையில் நேரில் வரவும்.

ந. பாலவிநாயகர்
மாவட்டச் செயலாளர்

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

மணியர்ஸ் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7381)



யாழ். பல்கலைக்கழக

## பட்டமளிப்பு விழா-1993

மேற்படி விழாவில் பங்குபற்றும் அனைத்து பட்டதாரி மாணவ, மாணவிகளுக்கு எமது நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும்.

## ஞானம்ஸ் ஸ்ருடியோ

உங்களை வரவேற்கின்றது.

யாழ். வளாக, கொழும்பு / பேராதனை வளாக பட்டதாரி மேல் அங்கிகள் எம்மிடம் உண்டு.

முக்கிய குறிப்பு;-


ஸ்ருடியோ இல 1 இலும் பிரத்தியேகமாக திருத்தி அமைக்கப்பட்ட ஸ்ருடியோ இல 2 இலும் படம் எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஞானம்ஸ் ஸ்ருடியோ

301, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7390)






பரிசுகள்

1ஆம் பரிசு செ. பாஸ்கரன் வல்லிபுர குறிச்சி.
2ஆம் பரிசு என்.அன்னலட்சுமி கைதடி மேற்கு, கைதடி.
3ஆம் பரிசு கே.கேதீஸ்வரன் பலப்பை வேன் தெற்கு பருத்தித்துறை.

ஆறுதல் பரிசுகள்

1 சாமி [கல்வாய், சாவகச்சேரி] 2. க. திலீபன் [செட்டிவளவு, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்], 3 தி. சந்திரலிங்கம் [சக்தி ஸ்ரோரீஸ் V.V.T.], 4. பி. மோகன் [சாவகச்சேரி]. 5. நாகேந்திரன் [வல்லிபுர குறிச்சி], 6 கிறிஸ்ர மேரி கில்டா [திருக்கன்னியர்மடம், மிருசுவில்], 7. சி. எஸ். பாலன் [618, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்] 8. தி சந்திரலிங்கம் [சக்தி ஸ்ரோரீஸ், V V. T], 9. திருமதி ச. விஜயசர்மா 86/174, கண்டிவீதி, யாழ்ப்பாணம்], 10. என். நாகேந்திரன் [வல்லிபுர குறிச்சி]

6-வது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்ட லாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளவும்.

புதிய முகவர்களாக:
1. பேரம்பலம் மருந்துக் கடை சுன்னாகம்.
2. மாருதி ஸ்ரோர்ஸ் கே. கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை.
3. வி.சுந்தரலிங்கம் ரஜனிபீடாஸ்ரோல்இமையாணன், உடுப்பிட்டி.
4. செல்வராசா ஸ்ரோர்ஸ் முதலாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-7365)

# திரிசங்கு நிலையில் காமினி; மூன்றாம் அணி சிதறுகிறது

சிறிலங்காவின் அரசியலில் மூன்றாவது அணியொன்றைக் கட்டி எழுப்பும் முயற்சி என்பது சாண் ஏற முழம் சறுக்கும் கதையாகவே நீடிக்கிறது. மாறிமாறி ஆட்சிபீட மேறும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் மாற்றீடாக மூன்றாவது அணியொன்றை கட்டி எழுப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் முதலில் களத்தில் குதித்தவர் முன்னாள் நடிகர் விஜயகுமாரணதுங்க. சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய அவர் சிறிலங்கா மக்கள் கட்சியை தோற்றுவித்ததுடன் இடதுசாரிக் கட்சிகளுடன் ஒரு இணக்கப்பாட்டை எய்தி ஐக்கிய சோசலிசக் கூட்டணியை ஏற்படுத்தினார். ஆனால் சில ஆண்டுகள் மட்டுமே நீடித்த அவரது முயற்சி துப்பாக்கி குண்டுகளினால் சாகடிக்கப் பட்டுவிட்டது. விஜயகுமாரணதுங்காவின் பிரேதப் பெட்டியின் மீது கைவைத்து ஐக்கிய சோசலிசக் கூட்டணியைக் காப்போம் என்று சூளுரைத்தவர்கள் அதை மறந்துபோய் ஆண்டுகள் சில கடந்துவிட்ட நிலையில்தான் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இம் முயற்சியில் இறங்கியது.

## ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தோற்றம்

ஜனாதிபதி பிரேமதாசா மீது கொண்டுவரப்பட்ட அரசியல் குற்ற விசாரணை கோரும் பிரேரணை தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களால் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தோற்றுவிக்கப்பட்டது அனைவருக்கும் தெரிந்ததே. புதிய கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் காபன் பிரதி அல்ல என்று தெரிவித்தார் லலித் அத்துலத் முதலி. அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும்; ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்; பாராளுமன்றம் வலுவாக்கப்பட வேண்டும்; ஜனநாயக நெறிமுறைகளுக்கு புத்துயிர் ஊட்ட வேண்டும்: என்பன போன்ற பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு பிரசாரம் மேற்கொள்வதில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஈடுபட்டிருந்த போதும் பிரேமதாசாவும், அவர் தலைமையிலான ஐ. தே. கவுமே தாக்குதல் குறியாக இருந்தது வெள்ளிடை மலை.

சுதந்திரக் கட்சியுடன் நெருக்கமாக இணையாமல், அதே வேளை சுதந்திரக்கட்சியிலிருந்தும் சிலரை ஈர்த்தெடுக்கும் வகையில் செயற்பட்டு வந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியானது மூன்றாவது சக்தியாக மிளிரும் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. இன்னும் ஒரு படி மேலே போனால் லலித்தின் மரணத்திற்கு முந்திய தேர்தல் பிரசார காலத்தில் பிரதான எதிர்க்கட்சிப் பாத்திரம் இக் கட்சிக்கு போய் சேர்ந்துவிடலாம் என்றும் சுதந்திரக்கட்சி மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டு விடலாம் என்றும் கூட நம்பப்பட்டது. லலித்தின் மரணத்தின் பின்னரும் கூட மூன்று மாகாணசபைகளில் தீர்மானிக்கும் சக்தியாகவும் ஏனைய நான்கு மாகாணங்களிலும் குரல் கொடுக்கக்கூடிய வகையிலும் முன்னணி வெற்றி பெற்ற போது மூன்றாவது சக்தியாக மிளிரும் வாய்ப்பையே அது கொண்டிருந்தது. எனினும் இப்போதைய அரசியல் நிலையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனது இலக்கை தொலைத்து விட்டிருப்பதாகவே கருத முடிகின்றது

## காமினியின் விளக்கம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தோற்றத்திற்கு ஜனாதிபதி பிரேமதாசா மீதான அரசியல் குற்றவிசாரணை கோரும் பிரேரணையும், பிரேமதாசாவின் அதிகாரத்துவப் போக்குகளுமே பிரதான காரணமாகும் என்று விளக்கமளிக்கும் முன்னணியின் இப்போதைய தலைவர் காமினி திசாநாயக்கா இவ்விரண்டு விடயங்களும் இப்போது பொருத்தம் அற்றவையாகி விட்டன என்றும் தெரிவிக்கின்றார். எனவே இவ் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள வாய்ப்பு இருந்தது அத்துடன் ஜனாதிபதி விஜேதுங்கா கடந்த காலத்தின் கசப்புகளை குழிதோண்டிப் புதைக்கவேண்டுமென்பதிலும் ஐ.தே.கவைப் பலவீனப்படுத்தும் விடயங்களைத் தவிர்க்க வேண்டும் எனக் கருதிய நிலையில் இரு கட்சிகளுக்கும் இடையிலான இணைப்புக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## இணைப்புக்கான முயற்சிகள்

ஐ தே.கட்சியின் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் ஜ ஐ தே. முவுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் இணைப்புக்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிற்கு அதிகாரம் அளித்தது. அதேபோல் ஜ ஐ தே மு செயற்குழுவும் கூட பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தலைவர் காமினி திசாநாயக்காவிற்கு அங்கீகாரம் அளித்தது இந்த நிலையில் தான் தலைவர் காமினிக்கும், செயலாளர் ஜி எம். பிரேமச்சந்திரவிற்கும் அமைச்சரவைப் பதவிகளும், மற்றும் சிலருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளும் கிடைக்கக் கூடும் என்று பரவலாக ஊகங்கள் வெளிபிடப்பட்டன. தேசிய அரசின் உருவாக்கம் பற்றிய வதந்திகள் கிளப்பப்பட்டது. தென் மாகாண சபையிலும், வட மத்திய மாகாணசபையிலும் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு இருக்கும் நெருக்கடிகள் தளர்வுறும் என்றும், மேல் மாகாண சபையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முதல்வர் திருமதி சந்திரிகா குமரணதுங்கவின் ஆட்சி கவிழ்க்கப்படலாம் என்றும் எதிர்பார்ப்புகள் கிளப்பப்பட்டன. ஜனாதிபதி டி பி.விஜயதுங்கவும், ஜ ஐ தே முன் தலைவர் காமினி திசாநாயக்கவும் ஏககாலத்தில் தத்தம் கட்சியின் செயற்குழுக் கூட்டங்களைக் கூட்டி பேச்சுவார்த்தை விபரங்களை வெளிபிடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டபோது இணைப்பு பூர்த்தியாகப்போகின்றது என்றே நம்பப்பட்டது. ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

## ஐ. தே. கவின் நிலைப்பாடு:

காமினியை ஐ. தே. கவில் இணைக்கும் யோசனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டால் பாராளுமன்றத்தையே கலைத்து விடுவேன் என்று பயமுறுத்தல் விடுத்து பிடிவாதமாக இருந்த ஜனாதிபதியின் போக்கு தொடர்ந்தும் அவ்வாறே நீடிக்கவில்லை. ஐ தே. கவினுள் இருக்கும் பிரேமதாசா விசுவாசிகள் பலரும் காமினி திசாநாயக்காவின் வருகைக்கும் ஜ. ஐ. தே முவின் இணைப்புக்கும் எதிர்ப்புக் காட்டி வந்தபோதும், ஜனாதிபதியின் திட்டத்திற்கு சிறிசேன குரே போன்றோர் ஆதரவு காட்டி வந்தது பலரையும் ஆச்சரியப்பட வைத்திருந்தது.

**இளையவன்**

எனினும் இருகட்சிகளையும் இணைப்பது தொடர்பாக ஐ. தே க. செயற்குழு முன் நிபந்தனைகளை விதித்தது டலி பெரமுனவின் ருக்மன் சேனநாயக்க மற்றும் காமினி வீரசேகர போன்றோர் செய்தது போல முன்னணியைக் கலைத்து விட்டு அனைவரும் தனித்தனியே ஐ தே. கவுடன் இணைந்து கொள்ளலாம். அல்லது தேர்தல் வரும்வரை காத்திருந்து இரு கட்சிகளும் ஒழுங்கிணைந்து ஒரு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடலாம். அலது காமினி திசாநாயக்காவை மட்டும் ஐ தே கவுடன் சேர்த்துக் கொண்டு அவருக்கு பதவி வழங்குவது என்று ஐ தே கவின் நிபந்தனைகள் அறிவிக்கப்பட்ட போது காமினி திசாநயக்கா திகைத்துப் போயிருப்பார் என்பதில் ஐயப்படவேண்டிய அவசியமில்லை.

## காமினியின் தர்மசங்கடம்

ஜ. ஐ. தே. முவில் இருந்த லலித்தன் விசுவாசிகளால் சந்தேகப் பார்வையுடனேயே காமினியின் நடவடிக்கைகள், நோக்கப்பட்டு வந்தது குறிப்பாக மேல்மாகாண சபை உறுப்பினர் எதிரிவீர பிரேமச்சந்திரா போன்றோர் திருமதி சிறிமாணி அத்துலத்முதலியை அரசியலரங்குக்கு கொண்டுவந்து காமினியின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடவும், முன்னணியின் தனித்துவத்தைப் பேண வேண்டும் என்பதற்காக மேல் மாகாணத்தில் திருமதி சந்திரிகாவிற்கு பகிரங்கமாக ஆதரவு காட்டவும் தயங்கவில்லை.

கடந்த மூன்றாம் திகதி நடத்தப்பட்ட ஜ ஐ தே. முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் மாத்தறை மவட்டத்திலிருந்து வந்த பிரதிநிதிகள் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கட்சியைக் கலைக்கும்படி பகிரங்கமாக கருத்து தெரிவிக்கும் நிலை உருவானது என்றும், அதற்கு கட்சித் தலைமை ஏன் தெளிவாகப் பதிலளிக்கவில்லை என்றும் கேள்வி எழுப்பியும் காமினிக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தினர். ஆனால் முன்னணி விடுத்த அறிக்கை பத்திரிகைகளில் முக்கிய இடத்தைப் பெறவில்லை, உத்தியோக பூர்வ ஏடான ராஜவளியவில் வெளியிடப்படும் என்று காமினி தெரிவித்தார்.

இவ்வாறு தமது கட்சிக்குள்ளேயே நெருக்கடிகளை சந்திக்கும்நிலையில், ஐ. தே. க அவருக்கு பச்சைக்கொடி காட்டியிருப்பதால் முன்னணி உறுப்பினர்களிடமிருந்து மேலும் தனிமைப்படுத்தப்பட்டுவிட்ட 'திரிசங்கு சொர்க்கத்தில்' காமினி திசாநாயக்க விடப்பட்டுள்ளார்.

காமினிதிசாநாயக்க'திரிசங்கு சொர்க்கத்தில்' விடப்பட்டிருக்கிறார் என்பது மட்டுமல்ல ஜ.ஐ.தே முன்னணி அரசியல் ரீதியாகப் பெரும் பின்னடைவையும் சந்திக்க நேர்ந்துள்ளது. மூன்றாவது சக்தியென்றைக் கட்டும் முயற்சி மீண்டும் ஓரடி முன்னால் ஈரடி பின்னாலெ என்றாகி இருப்பது மட்டும் இப்போதைக்கு தெளிவு:

# மருத்துவபீடமாணவர்தெரிவு யாழ். மாவட்டம்பெருவீழ்ச்சி

ஏப்ரல் 1992இல் நடைபெற்ற 1991ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்)விசேட பரீட்சைப் பெறுபேறுகளின்படி, யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மருத்துவபீடத்துக்குத் தேசிய திறமை அடிப்படையில் சுமார் 7 பேர் வரைதான் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு இருப்பதாக விடயமறிந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். அதேவேளை, 1991ஆம் ஆண்டு க. பொ. த. (உயர்தரம்) விசேட பரீட்சையில் யாழ். மாவட்டத்தின் பெறுபேறுகள் மிகக் குறைவு என்றும் கவலை தெரிவிக்கப்படுகின்றது

1990ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) இரண்டு பரீட்சைகளின் அடிப்படையில் மாணவர்களை மருத்துவபீடத்திற்கு அனுமதித்தபோது, யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய திறமை அடிப்படையில் 54 மாணவர்களும், மாவட்ட அடிப்படையில் 25 மாணவர்களுமாக மொத்தம் 79 மாணவர்கள் தெரிவானார்கள்.

யாழ். மாவட்டத்திலிருந்து 1990இல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, சரிபாதிப் பேர்தானும் இம்முறை இம் மாவட்டத்திலிருந்து மருத்துவபீடத்துக்கு அனுமதி பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு மேலதிக மாணவர்களை அனுமதிக்கக் கூடிய வாய்ப்பு இருந்தும், இதனை நிறைவேற்ற முடியாத சிக்கலான நிலைக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளதாம்.

1989ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்)1990-ம் ஆண்டு க.பொ த. (உயர்தரம்) பரீட்சைகளின் அடிப்படையில் இலங்கையிலுள்ள 6 மருத்துவபீடங்களுக்கும் 880க்கு மேற்பட்ட மாணவர்கள் அனுமதி பெற்றார்கள். இந்த அதிகரிப்பு வட கொழும்பு மருத்துவபீடத்தை அரசு பொறுப்பேற்று களனி பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடமாக மாற்றியதாலும், சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலும் மருத்துவ பீடம் அமைக்கப்பட்டதாலும் சாத்தியமாயிற்று என்று தெரிவிக்கப்படுகிறது. இம்முறை 1991 க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை 730 ஆகக் குறைக்கவேண்டும் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஒரு தீர்மானம் எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்த அனுமதி கடந்த வருடத்திலும் விடக்குறைந்து செல்வதைக் கருத்தில் கொண்டு, மருத்துவ பீடங்களுக்கு அனுமதிக்கும் எண்ணிக்கையை 800ஆக்க வேண்டும் என்ற கருத்தை பல்கலைக் கழக மனியங்கள் குழுத் தலைவர் தெரிவித்திருப்பதாகவும் விடயமறிந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். கொழும்பில் பெற்றோரும், கல்விமான்களும் கடந்த இரண்டு வருடங்களின் அனுமதிச் சராசரியிலிருந்து எண்ணிக்கையைக் குறைக்கக் கூடாது என்று வலியுறுத்தி வருகின்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த...

கடமையாற்ற வேண்டியநிலையில் இவ்வாறு கல்வி புகட்டப்பட்டிருந்தது.

தீவகத்தின் ஒரேயொரு உயர்தர கணித, விஞ்ஞான வகுப்புகளைக்கொண்ட பாடசாலையான வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயமும், வேறு ஒரு பாடசாலைகளும் பலமான பழைய மாணவர் சங்கங்களாலும், நலன் விரும்பிகளாலும், அதிபர்களின் முயற்சிகளாலும் ஓரளவேனும் தாக்குப் பிடித்து இயங்கி வருகின்றன, இப்பாடசாலை முன்னர் கல்வி, விளையாட்டுக்களில் பெற்றிருந்த முதனிலையை இன்று ஓரளவாவது நிலைநாட்டிக் கொள்ள சுமார் $1\frac{1}{2}$ மைல் தொலைவிலுள்ள தொழினுட்பக் கல்லூரிவிளையாட்டு மைதானத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.

சாதாரண கற்றலுக்கே தடைகளை சரமாரியாகஎதிர் நோக்கும்இவ் இடம்பெயர்ந்த மாணவர்கள் நூலக வசதிகளையோ ஆய்வுகூட வசதிகளையோ தாராளமாகப் பெறுவதென்பது பகல் கனவேயாகும். இந்நிலைமைகளையெல்லாம் தீர்ப்பதற்கு மேற்படி சிக்கலுற்று இயங்கும் பாடசாலைகளையெல்லாம் அருகிலுள்ள நிரந்தரமான வசதிகளுடன் இயங்கும் பாடசாலைகளுடன் ஒன்றிணைக்குமாறும் பழைய இடங்களுக்கு மீளத் திரும்புகையில் இப்பாடசாலைகளை மீள ஆரம்பிக்கலாம் எனவும் கல்வித் திணைக்களத்திலிருந்து ஆலோசனைகூறப்பட்டது ஆயினும் தங்கள் தங்கள் பாடசாலைகளின் தனித்துவத்தை பேணுவதாக கூறும் பாடசாலை நிர்வாகங்களோ இதற்கு முரண்டு பிடித்து வருகின்றன, இவ்விதமான இருபக்க நெருக்குதல்களுக்கிடையிலிருந்து அல்லாடுவது பரிதாபத்திற்குரிய மாணவர் சமுதாயமே என்பதைசம்பந்தப்பட்டவர்கள் உணரும் வரை இதற்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை

இந்நிலையில் வடமராட்சிக் கல்விக் கோட்டத்திலும் சுமார் நான்கு பாடசாலைகளை சேர்ந்த 734 மாணவர் வரை இடம்பெயர்ந்து கல்வி கற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 09-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10830
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
இல்லை.
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
28-0854, 26-5517, 42-9220, 26-0525, 41-5417
28-1110, 24-0853, 26 9145, 24-0207, 26-3177
24-0922, 42-3993, 27-1927, 42-8316, 24-5437
27-2761, 28-5484, 42-6511, 43 6007.


விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகத்தினரால்
நடாத்தப்படும்

## மாபெரும் இசை நிகழ்ச்சி

தமிழீழத்தின் தலை சிறந்த இசைக் குழுக்களான
"ராஜன் - சாந்தன்"
ஒரே மேடையில் இணைந்து வழங்கும்
"காற்றினிலே வரும் கீதம்"

இடம்: மானிப்பாய் மாவீரர் கலையரங்கு.
காலம்: 12-09-93 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்: மாலை 7.00 மணி.

அனைத்து மக்களும் அணிதிரண்டு வருக

ரிக்கட் பெறும் இடங்கள்:
குலம் இறீம் ஹவுஸ்
சண் றைக்கோடிங் சென்ரர் நியூமாக்கற்
மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்

விளம்பர அன்பளிப்பு:
சுன்னாகம் வர்த்தகர் சங்கம். (வி-7387)



## 1-வதுபிறந்ததினவாழ்த்து (10-09-93)



செல்வி
### அபிநயா ஜெகதீஸ்வரன்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் லோகேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிநயா 10-9-93 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். அபிநயாக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, கொழும்பில் இருக்கும் ரவிசித்தப்பா, உதயன்சித்தப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், கொலண்டில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, சித்தி, அம்மம்மாமார், தாத்தாமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், மச்சான்மார் ஆகியோர் இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

(சி/7383)


## கலிபர் தாக்குதல்

நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலை வேளையிலும் யாழ். கரையோரப்பகுதிகளை நோக்கி மண்டைதீவு, கல்முனைப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் தொடர்ச்சியாகவும் விட்டுவிட்டும் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத் தாக்குதல்களினால் அரியாலை தெற்குப்பகுதி, கொழும்புத் துறை, பாஷையூர், குருநகர்ப் பகுதி மீனவர்கள் தமது தொழிலுக்குச் செல்ல முடியாமல் திண்டாடுகின்றனர். (90)

### பொன்னாலை

...ந்தி விழாவிற்கு பெருமளவு பக்தர்கள் கூடியிருந்த வேளை படையினர் திடீரென எறிகணை தாக்குதலை மேற்கொண்டனர். எறிகணை ஒன்று ஆலய மேற்கு வீதிக்கு அருகில் வந்து வீழ்ந்த போதிலும் பக்தர்கள் எவரும் காயமின்றி உயிர் தப்பிக் கொண்டனர். தாக்குதலை அடுத்து பலர் கல்லினால ஆலய மண்டபங்களினுள்ளும் கிழக்கு வீதி பக்கத்திலும் பாதுகாப்புத் தேடி பதுங்கிக் கொண்டனர். [20]

### மருத்துவபீட...

...ளர். இதனால் தான் இம்முறை பல்கலைக் கழக அனுமதியில் தாமதமாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தைப் பொறுத்தவரை 100க்கு மேற்பட்ட மாணவர்களை அனுமதிக்களாம் என்றிருப்பதாலும், 1991 க.பொ.த (உயர் தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த எண்ணிக்கையைப் பெறுவது கடினம் என்று யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மருத்துவபீடத்துக்கு சுமார் 60 மாணவர்களதான் அனுமதிக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

பல்கலைக் கழக அனுமதி கடந்த வருடங்களைவிடக் குறைவாக இருக்கக் கூடாது என்பது பல்கலைக் கழக மானியங்கள் குழுவின் எழுதாச் சட்டமாகும். 1990ஆம் ஆண்டு கலைப் பீடத்திற்கு தேசிய தகைமையில தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தபோது, கடந்த ஐந்து வருட மாவட்ட அனுமதி சராசரியைக் கருத்தில் கொண்டு, மாணவர்களின் அனுமதி அதிகரிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது எனவே மருத்துவபீடம் மற்றும் ஏனைய பீடங்களின் அனுமதியில் உள்ள இன்றைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்படி முன்னுதாரணத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று விடயமறிந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

### பருத்தித்துறை

பொன் தியாகம் மங்கல விளக்கேற்ற கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் இளங்குமரன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இத் திறப்பு விழாவில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, காவல் துறை பொறுப்பாளர் நடேசன், யாழ். மாவட்ட தளபதி அன்பு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை நீதிமன்றத்தின் நீதியாளர்களாக ஜனகன், ஒப்பிலான், பேசுதாஸ் ஆகியோர் பதவிஏற்றுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகள் ஆரம்பமாகின. முதலாவது வழக்காக சைக்கிள்திருட்டு குற்றம் ஒன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. அடுத்து சட்டவிரோத கள் விற்பனை தொடர்பான விசாரணையும் எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. கோடரியால் தாக்கியதாக குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர் மீதான விசாரணையின் தீர்ப்பு 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (யோ) (25) (30)

## கப்டன் மலரவனின் 'போர்உலா' வெளியீடு

மாவீரரான கப்டன் மலரவன் [லியோ] எழுதிய போர் உலா எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4மணிக்கு பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இன்பன் தலைமையில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டில் வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்துவார்.

அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டுவைக்க முதல் பிரதியை துணை இராணுவ தளபதி பால்ராஜ் பெற்றுக்கொள்வார். டாக்டர் ஜெயகுலராஜா தமிழ்ச்செல்வன் ஆகியோர் சிறப்புரைகளையும், நூல் மதிப்புரையை யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியர் அ சண்முகதாஸ், திருமதி கோகிலாமகேந்திரன், கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

## தபால்களை சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் மற்றும் வெளியூர்த் தபால்களைச் சேர்ப்போர் நாளைக் காலை 8 மணிக்கு முன்னதாக யாழ். பிரதான தபாலகத்தின் முன்பாகவுள்ள தபால் பெட்டியில் சேர்க்கும்படி யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தபால்கள் "குமாரி" கப்பல் மூலமாக கொழும்பு தபாலகத்திற்கு எடுத்துச் செல்ல இருப்பதால் உரிய காலத்தில் தபால்களை உடன் சேர்க்குமாறு அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

## இரு இளைஞர் கைது

[வவுனியா]

பருத்தித்துறையைச் சேர்ந்த இரு இளைஞர்களை வவுனியாவில் படையினர் கைதுசெய்து தாண்டிக்குள முகாமில் தடுத்து வைத்துள்ளனர். கைதான ஒருவர் பருத்தித்துறையைச் சேர்ந்த காந்தரூபன் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பேயாடிக் கூளான் குளம் பகுதியில் வைத்து இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைதான இவர்கள் தாண்டிக்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### இஸ்ரேல்

...யர்கள் அகதிகளாக ஓடினர். இழந்தபாலஸ்தீனத்தை வென்றெடுக்க 1964இல் பாலஸ்தீன விடுதலைஇயக்கம்உருவானது. 1967 இல் நடைபெற்ற போரிலும இஸ்ரேல் காஸா, மேற்கு கரை, சினாய் பாலைவனம், கோலான் மலை என்பவற்றை ஆக்கிரமித்தது.

இப்போதைய உடன்பாட்டின் படி காஸா ஜெரிகோ நகர் பகுதி என்பவற்றிலிருந்துதான் வெளியேறி அங்கு பலஸ்தீன சுயாட்சி ஏற்படுத்தவும் இஸ்ரேல் இணங்கியுள்ளது

### கைது

பாக்கி ஒன்றினால் தன்னைக் கொலை செய்யப்போவதாக பயமுறுத்தினார் என்று பம்பலபிட்டி வாசி ஒருவர் கொடுத்த புகாரை அடுத்து இவரை பொலிசார் கைது செய்தனர்.

சந்தேக நபருக்குச் சொந்தமான ஆயுதமொன்றை பொலிசார் மீட்டுள்ளனர்.

## அதிபர்கள் கூட்டம்

மருதனார்மடக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் இக் கோட்டத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளின் அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### மாவுடன் வாதுவ

யாழ் மாவட்டத்திற்கான மேலும் 3000 மெற்றிக் தொன் மாவை திருக்கோணமலையில் இருந்து ஏற்றிக் கொண்டு "வாதுவ" கப்பல் இன்று காங்கேசன்துறையை வந்தடையுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

பருத்தித்துறை இறங்கு துறையில் பொருள்களை "குமாரி" கப்பல் இறக்கி முடிந்ததும் அங்கிருந்து "வாதுவ" கப்பல் பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து பொருள்களை இறக்குமென தெரிவிக்கப்பட்டது (பா)

### இராணுவ

வேறு குற்றங்களை புரிந்தவராக இருக்கலாம், எண்ணற்ற பிரச்சினைகளில் தொடர்பு கொண்டவராக இருக்கலாம், இத்தகையவர்கள் படையில் சேர்வதற்கு இப்போதைய ஆட்சேர்ப்புமுறை தளர்வு வழிவகுத்துள்ளதாக அவ்வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

புதியவர்களுக்கு 45 தினங்கள் பயிற்சி அளிக்கப்பட்ட பின் அவர்களை விடுமுறைக்காக வீடுகளுக்கு அனுப்பும் போது தமது பழைய குரோதங்களை இவர்கள் தீர்க்க இப் பயிற்சியையே பயன்படுத்துவர். அதேசமயம் குறுகிய கால பயிற்சியுடன் படையை விட்டு விலகவும் சிலர் திட்டமிடலாம். இவர்களால் வேறு பல சமூக விரோத பிரச்சினைகள் தோன்றலாம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. இத்தகைய காரணங்களால் பணமே விரயமாகிறது எனக் கூறும் அதிகாரிகள் சிலர் இராணுவத்தில் இளைஞர் இணையபின்னடிப்பதற்குகாரணம் எது என்பதை கண்டறியாமல் ஆட்சேர்ப்பு தகைமைகளை குறைப்பது சரியானதல்ல என்றும் கூறினார்.


யாழ் நகர் ஸ்ரீதர் திரை யரங்கில்
VON RYAN'S EXPRESS
இத்துடன் 'இதயபூமி 1' [மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது
தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00மணி (வி-7352)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது